மலர்-1 இதழ்-17 மே 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



## மலையளவு பாவம் கடுகளவாகவும் கடுகளவு புண்ணியம் மலையளவாகவும் மாற்றும்

# சித்திரை பௌர்ணமியின் சிறப்புகள்

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடி வரும் பௌர்ணமி நாள் சித்ரா பௌர்ணமி நாளாகும். சித்ரா பௌர்ணமி, சித்திரை நட்சத்திரமும், மாதமும் அம்மனுக்குரியனவாக இருப்பதனால், இத்தினம் அம்பாளை பூசிக்க மிகவும் சிறப்புப் பொருந்திய நாளாக அமைகின்றது. அத்துடன் தாயாரை இழந்தவர்களுக்கு பிதிர் தர்பணம் செய்யும் நாளாகவும், பிரம்மஹத்தி தோஷம் பிடித்தவர்கள் தோஷம் நீங்கும் விரதமாகவும், சித்ரா பௌர்ணமியில் பிறந்த சித்திர குப்தர் விரத நாளாகவும் கொண்டாடப்படுகிறது. சித்திரை மாதத்தில் சூரிய பகவான் உச்ச பலம் பெறுகிறார். சந்திரன் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கிறார். சூரியனை பித்ருகாரகன் என்றும், சந்திரனை மாத்ருகாரகன் என்றும் கூறுவர். அதாவது அமாவாசையன்று சூரியனும், சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு திதி, தர்ப்பணம் செய்கிறோம்.

சூரியனுக்கு அதிதேவதையாக பரமசிவனையும், சந்திரனுக்கு அதிதேவதையாக பார்வதியையும் வைத்திருக்கின்றார்கள். அமாவாசை, பௌர்ணமி அன்று முறையே சூரிய சந்திர சங்கமத்தையும், சமசப்தமமாக இருப்பதையும் சிவசக்தியின் ஐக்கியம் என்று கூறப்படுகிறது.

சித்ரா பௌர்ணமி வரலாறு: தேவலோகத்தில் எல்லோருக்கும் சிவபெருமான் வேலை களைப் பிரித்துக் கொடுத்தார். மக்களின் பாவ, புண்ணியங்களை கணக்கெடுக்கும் பணியை யாருக்கும் தராதது அவருக்கு நினைவுக்கு வந்தது. இதற்காக புதிதாக ஒருவரை படைக்கத் தீர்மானித்தார் சிவபெருமான்.

இப்படி அவர் யோசித்தபோது, பார்வதி தேவி ஒரு பலகையில் அழகான ஒரு சிறுவனின் படத்தை வரைந்தார். அதைப் பார்த்து மகிழ்ந்த பெருமான், அந்த சித்திரத்துக்கு உயிர் கொடுத்தார். இப்படி சித்திரத்திலிருந்து உருவானதால் அவர் சித்திரகுப்தன் என பெயர் பெற்றார்.

சிவபெருமானின் அரவணைப்பில் கயிலாயத்தில் இருந்தபடி, உலகத்து மக்களின் பாவ, புண்ணியக் கணக்குகளை எல்லாம் முறையாகத் தொகுக்க ஆரம்பித்தார் அவர். இப்படி பொறுப்பாக பணிபுரிந்த சித்திரகுப்தன் இன்னொருமுறை பிறக்க நேர்ந்தது. தேவர்கள் தலைவனான இந்திரனுக்கும் அவன் மனைவி இந்திராணிக்கும் மனதுக்குள் ஒரு குறை. அது, தங்களுக்கு ஒரு குழந்தையில்லை எனும் குறைதான். இந்தக் குறையைத் தீர்க்க, இந்திரனும் அவன் மனைவி இந்திராணியும் சிவபெருமானை நோக்கிக் கடுமையான தவம் இருந்தார்கள்.

இந்திரனுக்கு நேரடியாக பிள்ளைப்பேறு தர முடியாதே என சங்கடப்பட்ட சிவ பெருமான், இந்திரனுக்கு சித்திரகுப்தனை மகனாகப் பிறக்க வைக்கத் தீர்மானித்தார். இந்திரனின் அரண்மனையில் இருந்த காமதேனுவின் கருப்பையில் சித்திர குப்தனை புகச்செய்த சிவபெருமான், அந்தப் பசுவுக்குக் குழந்தையாகப் பிறந்து, இந்திரனின் குழந்தை பாக்கிய குறையை தீர்த்துவைக்குமாறு கூறினார்.

இதை இந்திரனுக்கும் அவர் எடுத்துரைக்க, எப்படியோ ஒரு குழந்தை கிடைத்தால் போதும் என இந்திரனும், இந்திராணியும் சம்மதித்தனர். காமதேனுவுக்குக் குழந்தையாகப் பிறந்தார் சித்திரகுப்தர் சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரத்தில் பிறந்ததால் அவருக்கு சித்திரா புத்திரன் என அழைக்கப்படுகிறார்.

இந்த சித்திரா புத்திரன் சிவபெருமானின் கட்டளைக்கு இணங்க, எமலோகத்தில் வீற்றிருக்கும் எமதர்மராஜனுக்கு உதவி செய்வதற்காக, உலக மக்களின் பாப புண்ணிய கணக்குகளை குறிக்கும் மிகப்பெரிய பதவியான எமதர்மனின் கணக்குப்பிள்ளையாக நியமிக்கப்பட்டார்.

இத்தகைய சிறப்புகளை உடைய சித்ரா பௌர்ணமி நாளில் அனைத்து திருக்கோவில்களிலும் சிறப்பு வழிபாடுகளுடன் கொண்டாடப்படுகிறது. இந்த சித்திரபுத்திர நாயனார் கதை சித்ரா பவுர்ணமி அன்று ஆலயங்களில் படிக்கப்பட்டு அன்னதானங்கள் நடைபெற்று வருகின்றன. சித்திரைக் கதை, சித்திரைக் கஞ்சி எனவும் வழங்கப்படும்.

சித்திரை பௌர்ணமிக்கு சில தனிச் சிறப்புக்கள் உள்ளன. மாதம் தோறும் வரும் பௌர்ணமி நாளில் மலைக்கோவில்களுக்குச் சென்று மக்கள் கிரிவலம் வருகின்றனர். எனினும், சித்திரைப் பௌர்ணமியன்று கிரிவலம் வருதல், கோவில்களிலும் புனிதத்தலங்களிலும்



தம் குடும்பத்தாருடன் பொங்கல் வைத்தல் போன்றன சிறப்பானவையாகும்.

மேலும் அன்றைய தினம் புனித நதிகளில் நீராடியும் நமது பாவங்களைப் போக்கிக் கொள்ளலாம். சித்திரா பௌர்ணமியில் சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் சேர்ந்து வருவதால், அன்று கடலில் நீராடுவது மிகவும் சிறப்பானதாகக் கூறப்படுகின்றது. ஏனெனில் அன்றைய தினம் கடலில் நீராடுபவர்களின் பாவங்களை கழித்தும் சிலவற்றை தாமே ஏற்றுக்கொள்ளவும் அங்கே பிரசன்னமாகியுள்ள பித்ருக்கள், மகரிஷிகள், சித்த புருஷர்கள், யோகியர்கள் தயாராக இருப்பார்களாம்.

மேலும் சித்திரையில் பிறந்த சித்திர குப்தனின் திருமணமும் சித்திரை மாதத்தில் வந்த பௌர்ணமி அன்றே நடைபெற்றது. சித்திரை நட்சத்திர தினத்தன்றுதான் நீலாதேவி மற்றும் கர்ணிகாம்பாளை மணந்ததாகப் புராணம் சொல்கிறது. அன்று சித்ரகுப்தனுக்கு பூஜை செய்வது சிறப்பு. இதன்காரணமாகத்தான் புதுமணத் தம்பதிகள் சித்திரா பௌர்ணமி தினத்தில் ஆறு, குளம், கடல் போன்றவற்றில் நீராடி கோவில்களில் பொங்கலிட்டும் மலைக் கோவில்களை கிரிவலம் வந்தும் இறைவனை வழிபடும்போது, சித்திர குப்தனைமனதில் நினைத்து “நாங்கள் மலையளவு செய்த பாவங்களை கடுகளவாகவும் கடுகளவு செய்த புண்ணியத்தை மலையளவாகவும் எழுதிக்கொள்” என மனதார வேண்டி வழிபட்டனர் நமது முன்னோர்கள்.

## முன்னோர்கள் விரதமிருந்த வழிமுறை:

சித்ரா பௌர்ணமி அன்று நமது முன்னோர்கள் சில விரத முறையை கடைபிடித்துள்ளனர். அதன்படி காலையில் பூஜை அறையில் விநாயகப்பெருமானின் அருகில் நோட்டு புத்தகமும் பேனாவையும் வைத்து, ஒரு பேப்பரில் “சித்திரகுப்தன் படியளப்பு” என்று எழுதி வைப்பார்கள்.

சர்க்கரைப் பொங்கல் அல்லது வெண் பொங்கலை ஒரு தலை வாழை இலையில் வைத்து படைத்து, படையலுடன் மாங்காய், தேங்காய், பலவகை காய்கறிகள், பருப்புகள், தயிர் கடையும் மத்து, உளி போன்றவற்றையும் வைப்பார்கள்.

தொடர்ந்து தேங்காய் உடைத்து தீப ஆராதனை காட்டி வழிபட்டு பொங்கலை எல்லோருக்கும் தானமாகக் கொடுப்பார்கள்.

இந்த வழிபாட்டின்போது “சித்ரா குதம் மஹா ப்ராக்ஜம் லேகணீ பத்ர தாரிணம் சித்ரரத்னாம் பரதாரம் மத்யஸ்தம் சர்வ தேஹினாம்” என்ற மந்திரத்தைக் கூறி சித்ர குப்தனை வழிபட வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

மேற்கண்ட வகையில் சித்திராபௌர்ணமி நாளில் சித்திரகுப்தனுக்குரிய விரத முறையை கடைபிடித்துள்ளனர் நமது முன்னோர்.

## சித்ரகுப்த கோயில்:

இந்த சித்ரகுப்தனுக்கென காஞ்சிபுரத்தில் ஒரு ஆலயமும், திருவண்ணாமலையில் ஒரு சன்னதியும் உள்ளது. இதே போல் தேனி மாவட்டம் போடி அருகே கோடங்கிப்பட்டி, கோவை சிங்காநல்லூர் எமதர்மன் கோயில்களிலும் சித்ரா பவுர்ணமி தினத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகிறது.

## பல கோவில் திருவிழாக்கள்:

சித்ரா பௌர்ணமி நாளையொட்டி தான், ஸ்ரீசொக்கநாதர் ஸ்ரீமீனாட்சி திருக்கல்யாணம் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நடைபெறும். சித்திரைத் திருவிழாவின் ஒரு பகுதியாக கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கி மண்டூக மகரிஷிக்கு அருள் செய்யும் வைபவமும் நடைபெறுகிறது.

குற்றாலத்திலுள்ள செண்பகா தேவிக்கு சித்ரா பௌர்ணமி அன்று சிறப்பு ஆராதனைகள் நடத்தப்படும். அப்போது சந்தன வாசனையோடு கூடிய மழை பெய்யும் என்பது ஐதீகம்!

திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற, சித்தர்கள் பலர் வசிப்பதாகக் கூறப்படும் கஞ்சன் மலையில் சித்திரைப் பௌர்ணமியன்று அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறும். இந்த மலையில் வசிக்கும் சித்தர்கள் மலைக்கோயில் அருகிலுள்ள நீரூற்றிலும், மலைமேலுள்ள சித்தேஸ்வரர் கோயி லுக்கு அருகில் உள்ள தீர்த்தங்களிலும் நீராடி, வான் வழியாக கஞ்ச மலையை நட்சத்திரங்கள் போன்று வலம்வருவதாக ஐதீகம்! இரவு 11 மணியிலிருந்து விடியற்காலை 4 மணி வரை மெதுவாக நகர்ந்துகொண்டே வந்து பின்னர் மறைந்து விடுகிறது இந்த நட்சத்திர ஒளி.

காஞ்சிபுரத்தில் அமைந்து உள்ள சித்ரகுப்தன் கோயிலில் காலையில் மகா அபிஷேகமும், மாலையில் திருமணமும் நடைபெறுகிறது. அன்று இந்திரன் காஞ்சிபுரம் வந்து சித்ரகுப்தனை

> “சித்திரை பௌர்ணமி அன்று கடலில் நீராடுபவர்களின் பாவங்களை கழித்தும் சிலவற்றை தாமே ஏற்றுக்கொள்ளவும் அங்கே பிரசன்னமாகியுள்ள பித்ருக்கள், மகரிஷிகள், சித்த புருஷர்கள், யோகியர்கள் தயாராக இருப்பார்களாம்”





பூஜிப்பதாக ஐதீகம். சித்ரகுப்தனை தரிசித்தால் கேது உபாதையிலிருந்து நிவாரணம் பெறலாம்!

அம்பிகையின் ஆலயங்களில் குளிர்ச்சி செய்வதன் மூலம் அம்பிகையின் சீற்றத்தால் தோன்றும் சின்னம்மை போன்றவை ஏற்படாது என்பது ஐதீகம். அதனால் அம்மன் ஆலயங்களில் குளிர்ச்சி பெரு விழாவாக கொண்டாடப்படுகின்றது.

சித்ரா பௌர்ணமியன்று திருவண்ணா மலையை நாம் மட்டுமல்ல, தேவர்களும் சித்தர்களும் ஞானிகளும் சூட்சுமமாக வலம் வருகிறார்கள் என்பது ஐதீகம்.

ராஜபாளையம் அயன்கொல்லங் கொண்டான் அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் சித்ரா பௌர்ணமியை ஒட்டி நடக்கும் சக்தி பூஜையில் அலகு பூஜை செய்வர். காஞ்சி வரதராஜ பெருமாளை பிரம்மதேவன் பூஜிப்பார்.

தேனி மாவட்டத்தை அடுத்து, தமிழககேரள எல்லையில், ஐயாயிரம் அடி உயரமான மலைமீது உள்ள மங்கலதேவி கண்ணகி கோயிலில் சித்ரா பௌர்ணமி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று ஒருநாள் மட்டுமே திறந்திருக்கும்.

காஞ்சிபுரத்திற்கு அருகில் ஐயங்கார் குளம் எனும் திருத்தலத்தில் உள்ள சஞ்சீவிராயர் சுவாமி கோயிலையொட்டி நடவாவிக் கிணறு ஒன்று உள்ளது.

இந்தக் கிணற்றுக்குள் அழகிய சிற்ப வேலைப் பாடுகள் நிறைந்த 16 கால் மண்டபம் உள்ளது. இந்தப் பெரிய கிணற்றில் சித்ரா பௌர்ணமி அன்று ஒருநாள் மட்டும் உள்ளிருக்கும் நீரை முழுவதுமாக வெளியேற்றி 16 கால் மண்டபத்தில் காஞ்சி வரதராஜப் பெருமாளை எழுந்தருளுவார்!

மறுநாள் மாலையில் ராமர், லட்சுமணன், சீதை ஆகியோரையும் அந்த மண்டபத்தில் எழுந்தருளச் செய்வர். இரண்டு நாட்கள் மட்டும் பூமிக்கு அடியில் கிணற்றுக்குள் சுவாமிகளைத் தரிசிக்கலாம். அதன்பின் கிணற்றில் நீர் ஊற்றுப் பெருக்கெடுத்து மண்டபத்தையும் கிணற்றையும் நிரப்பிவிடும்.

இந்த அபூர்வ காட்சியைத் சுற்றுவட்டாரத்து மக்கள் வந்து தரிசித்து பெருமாளின் திருவருளைப் பெறுகின்றனர்.

பழங்காலத்தில், சித்ரா பௌர்ணமியன்று ஆற்றங்கரையில் உறல் தோண்டி, அதற்கு திருவுறல் என்று பெயர் சூட்டி, அங்கே இறைவனை வலம் வரச் செய்தார்கள். சித்ரா பௌர்ணமியன்று ஆற்றங்கரைகளுக்கு குடும்பத்தோடு செல்லும் மக்கள், அங்கு உணவு உண்டு மகிழ்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

## அறியாத பாவத்தை தீர்க்கும் நாள்

சித்திர குப்தன் மக்களின் பாவ புண்ணியங்களை எழுதும்போது, மக்கள் அறியாமல் செய்த பாவத்திற்கும் நேர்மையாக பாவக் கணக்கை எழுதுவதை எண்ணி மனம் வருந்தினர்.

இதற்கு தீர்வு காணவேண்டி, சிவபெருமானிடம் தனது மனக் குறையை கூறி மிகுந்த வருத்தமடைந்தார். மேலும் மக்கள் அறியாமல் செய்த பாபங்களை பொறுத்து மக்களை காத்து ரஷிக்க வேண்டும் என்று பரமசிவனிடம் வேண்டுகிறார்.

சித்திர குப்தனின் வேண்டுதலை ஏற்று, சித்ரா பவுர்ணமியன்று சித்திரகுப்தனை வேண்டுபவர்களுக்கு அறியாமல் செய்த பாவங்களிலிருந்து விலக்கு அளிக்கும் சக்தியை சித்திரகுப்தனுக்கு சிவபெருமான் அளித்தார். இதனால் மகிழச்சி அடைந்த சித்திரகுப்தன் மக்கள் அறியாமல் செய்யும் பாவங்களை அன்றைய தினம் நீக்குவதாக புராணங்கள் குறிப்பிடுகிறது.

சித்ரா பவுர்ணமியன்று சித்திரகுப்தனை வணங்கினால் அறியாமல் செய்த பாவங்கள் மலையளவாக இருந்தாலும் அது கடுகளவாக மாறும். அதுபோலவே அன்று செய்யும் தானம் கடுகளவாக இருந்தாலும் அது மலையளவாக மாறுவதும் உறுதி.

சித்ரா பவுர்ணமியன்று தானங்கள் பல செய்யவேண்டும். சித்திர குப்தனின் பணிக்கு முக்கியத்துவம் வாய்ந்த நோட்டுப்புத்தகம், பேனா, பென்சில் போன்ற எழுது பொருட்கள் சம்பந்தப்பட்ட பொருட்களை தானமாக வழங்கினால் வாழ்வு சிறக்கும் என்பது நம்பிக்கை.

## சித்ரகுப்தனுக்குரிய காயத்ரி மந்திரம்:

ஓம் தத்புருஷாய வித்மஹே
சித்ரகுப்தாய தீமஹி
தன்னோ லோகஹ் ப்ரசோதயாத்

பெற்றோர் இல்லாமல் கைவிடப்பட்ட குழந்தைகள் காப்பகம் போன்றவற்றிற்கு சித்திராப் பௌர்ணமி அன்று எழுது பொருட்கள், அன்ன தானம் போன்றவற்றை கொடுக்க முடிந்தவர்கள் கொடுத்தால் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.



# உலக நன்மைக்காக பர்மாவில் ஒரு யாகம்

சித்திரைப் பௌர்ணமியை முன்னிட்டு பர்மா நாட்டில் யாங்கூன் என்னும் இடத்தில் மிகப்பெரிய யாகம் ஒன்றினை, தமிழகத்தைச் சேர்ந்த "அகஸ்தியர் கிருபா" அமைப்பினர் நடத்தவுள்ளனர். இந்த அமைப்பினரின் சேவை மிகுந்த உன்னதமான சேவையாகும்.

தமிழகத்தில் பாழடைந்து கைவிடப்பட்ட பல ஆலயங்களை, இந்த அமைப்பினர் புதுப்பித்து, அந்த ஆலயத்தை மீண்டும் நிர்மானித்து, வழிபாட்டிற் குரிய ஆலயமாக மாற்றி வருகின்றனர். இந்த அமைப்பின் மூலம் இதுவரை 900 ஆலயங்களை புத்துயிர் பெற்று பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த அமைப்பினரின் முழுமுதற் பிரதானமாக விளங்குபவர் அகத்திய மாமுனிவர். அகத்தியரை முன்னிலைப் படுத்தியே இவர்களின் சேவைப் பணி அமைந்துள்ளது. அந்த வகையில் அகத்தியரின் கூற்றுப்படியும், உலக நன்மை வேண்டியும், பர்மாவில் உள்ள யாங்கூனில் சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் 8.5.2017 அன்று துவங்கி 10.5.2017 பௌர்ணமி திதி அன்றுவரை மிகப் பெரிய ஒரு யாகத்தை நடத்த, அகத்தியர் அருள்வாக்கு கட்டளையின்படி இந்த அமைப்பினர் நடத்தவுள்ளனர்.

உலகில் தற்போது நடைபெறவுள்ள மிகப்பெரிய அழிவை தடுக்கவும், இந்தியாவின் நலன் வேண்டியும், உலக மக்களுக்கு ஏற்பட விருக்கும் இன்னலை தடுத்து நிறுத்தவும், அகத்தியரின் அருள்வாக்குப்படியே இந்த யாகம் நடத்தவிருப்பதாக, இந்த அமைப்பின் ஒருங்கி ணைப்பாளர் "அகத்தியர் கிருபா" கூறியுள்ளார்.

பர்மா யாங்கூனில் நடக்க இருக்கும் மகா யாகத்தை பற்றி அகத்தியர் அருள்வாக்கு:

மங்களகரமாக இருக்கின்ற நிகழ்வுகளுக்கு மூலகாரணமாக விளங்குகின்றவன் இறைவன். இறைசக்தி என்பது பிரபஞ்சம் முழுவதும் பரவி தான் கிடக்கின்றது. கிடக்கின்ற இறைசக்தி எல்லாம் உலக நன்மைக்காக எப்போதுமே இயங்கிக் கொண்டு தான் இருக்கின்றன. கால காலமாக சித்தர்கள் யாங்கள் எங்கெங்கு பயணித்தாலும் எங்கள் பயணங்கள் யாவும் அதி அற்புதமான உலக நன்மைக்காகவே அமையும் என்பதை அறிந்து கொள்வாய் கருணையே.

கருணையே உரைக்கின்றேன் கேளடா மைந்தா. இத்தலமதில் இருக்கின்ற பல சூட்சும ரகசியங்களை அன்னவன் உரைக்கின்றேன். உலகம் என்பது தற்போது பார்வையில் பார்த்து கொண்டிருக்கின்ற நிலை என்பதை மட்டும் எண்ணி விடாதே.இது பிரபஞ்சத்தின் ஒரு துளி தான் என்பதை நீ அறிவாய் அப்பா. பிரபஞ்சம் என்பது இது போன்று கிட்டத்தட்ட 17 உலகங்களை அடக்கியதடா கருணையே. இந்த 17 உலகங்களுக்கும் இறையே மகா பரம்பொருளாய் வீற்றிருக்கின்றானடா. உலகத்தில் இருக்கின்ற எல்லா ஜீவராசிகளும் உங்களுடைய கணிப்பின்படி ஒருலகம் என்றெல்லாம் இல்லாமல் சகல உலகங்களுக்கும் இறைவனே பிரதானமாய் நிற்கின்றானடா. அந்த இறைசக்தி ஆட்கொள்ளும் போதும் ஒருவன் ஏகாந்தத்தை உணர்கின்றானடா. அவ்விதம் உணர்கின்ற ஏகாந்தமானது எப்பொழுதுமே அன்னவனுடைய ஆற்றலை பலவித எண்ணங்களுக்கு உட்பட்டு கொண்டு செல்லும் அற்புத ஆற்றலை உடையதாக தான் இருக்கின்றதடா..

உரைக்கின்றேன் கேளடா மைந்தா இத்தலமதில் நிகழ்கின்ற ஒவ்வொரு அபூர்வ நிகழ்வுகளை பற்றி யாங்கள் எப்போது , எச்சூழலில் இந்த உலகத்திற்கு நன்மை பயக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு சப்த ரிஷிகளும் ஓரிடத்தில் அமர்ந்து செய்கின்ற மகா யாகங்களை தற்போது தன்னையே உணராத மானுடருக்கு அளிக்கின்ற காலம் ஒன்று உண்டடா கருணையே. அது தான் தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

பர்மிய தேசம் என்று நாங்கள் அழைக்கபடுகின்ற தேசத்தில் மிகச் சரியாக இந்திய எல்லையின் ஈசானிய பகுதியில் இருக்கின்ற இப்பகுதியில் நடக்கப் போகின்ற இந்த மகா யாகத்தின் அதி நுட்பத்தை விவரிக்கின்றேன் கேளடா மைந்தா. நுட்பத்தின் நுட்பமென்று நாங்கள் உரைக்கின்றோமடா இதை. இப்போது அமைந்துள்ள இந்த ஸ்தலம் மிகச்சரியாக 17000 ஆண்டுகளுக்கு முன்னால் யாங்கள் யாகம் செய்த பூமியப்பா இது. இந்த பூமியில் எவரெவர் கால் வைக்கின்றார்களோ அவருடைய முற்பிறவி வினைகளெல்லாம் தானே அழிந்து விடும் தன்மையை கொண்டதடா. அத்தடம் பூமியின் கீழ்மட்டத்தில் காணப்படுகின்ற நுட்பமான மிகச்சிறந்த எரிமலை பகுதிகளை உள்ளடக்கிய பகுதியடா. அத்தடத்தின் மேல் தான் அத்தடத்தின் மேல் தான் தற்போது நீ மகாயாகத்தினை ஏற்றிருக்கின்றாயடா. இத்தலத்தில் நிகழ்த்தப் படுகின்ற மகாயாகமானது உலகத்திற்கே மிக அற்புதமான நன்மையை தரக்கூடியதாக இருக்குமப்பா. பேராற்றலை கொண்டு நடக்கின்ற ஆழி மற்றும் ஊழி என்று எங்களால் வர்ணிக்கப் படுகின்ற நீரால் அழியக்கூடிய சூழலை இந்த மகா யாகமானது நிச்சயம் தடுக்கும் என்பது தான் எங்களுடைய கூற்றடா.

ஆதலால் தான் இத்தலத்தில் யாங்கள் இதற்கான முன்னேற்பாடுகளை செய்திருக்கின்றோமடா. பூர்வ புண்ணியத்தின்படி எவனொருவன் இந்த தலத்திற்கு சென்று தரிசிக்கின்றானோ, அதனால் அன்னவனுடைய பாவ வினைகள் கழியப்படுகின்றன என்பதனை அறிந்து கொள்வாய். மேலும் கருணையே அற்புதமான இரகசிய மூலிகைகளை எல்லாம் யாங்கள் உங்களுக்கு அளித்து விட்டோம். அவைகளை எல்லாம் கொண்டு அத்தலத்தில் இருக்கின்ற மகா யாகத்தில் பூரண பஸ்பமாகும்படி அகோர மந்திரத்தை உச்சரித்து பிரயோகித்தால் நிச்சயம் உலகமே நற்பயனைப் பெறும் என்பதை தெரிந்து கொள்வாயடா.


www.aanmeegamalar.com

மேலும் ஒன்றை விவரிக்கின்றேன் கருணையே. இத்தலத்தில் இருந்து கொண்டு எவனொருவன் இறையை மனமுருகப் பிரார்த்திக்கின்றானோ, அவனுடைய பிரார்த்தனைகள் யாவும் பரிபூரண மாக ஜெயமாகும் என்பது திண்ணம். மேலும் இத்தலத்தில் மிகப்பெரிய மாற்றங்களை உள்ளடக் கக்கூடிய அற்புத யாகமப்பா இது. இந்த யாகத் தின் போது இடப்படுகின்ற பொருள்களின் மூலம் வெளிப்படுகின்ற சக்தியானது பிரபஞ்ச வெளியின் எல்லையைத் தாண்டி நிச்சயமாய் ஊடுருவுகின்ற சக்தியை பெற்றதாகுமப்பா இது. மேலும் 36 வகையான கூட்டு மருந்துகளை உன் னிடம் பகிர்ந்திருக்கின்றோமடா. இந்த கூட்டு மருந்துகளைக் கொண்டு நிச்சயமாக மகா பூர்ணாகுதியின் போது அதில் வெளிப்படுகின்ற கதிர்வீச்சுக்கள் நீல நிறமாகவும், வெண்ணிற நிறமாகவும் மற்றும் வெளிர் பச்சை நிறமாகவும் வெளிப்படும். அது இங்கே இந்த காற்றிலே கலந்து அதனுடைய சப்த ஒலிகளின் மூலம் ஈர்க்கப்பட்டு இந்த பிரபஞ்சத்தில் இருக் கின்ற ஜீவராசிகளை எல்லாம் திரும்பவும் பூலோகத்திற்கு கொண்டு வரக்கூடிய அதி அற்புத ஆற்றல் வாய்ந்த ஒளிக்கதிர்களாக அது மாறுமப்பா.

இவ்வொளிக்கதிர்களை எவன் அருகில் இருந்து தரிசிக்கின்றானோ அல்லது இந்த ஹோமப் புகையில் இருந்து வருகின்ற அற்புத சுகந்தத்தை எவனொருவன் நுகர்கின்றானோ அன்னவன் உலகில் இருக்கின்ற அணுக்கதிர்கள் எல்லாம், அணுவால் செய்யப்பட்ட மூலங்களெல்லாம் எல்லாம் நிச்சயம் உயிர் பெறும் என்பது தான் உண்மையடா.

தள்ளாத வயதிலும் அல்லது சிறு குழந்தையாய் இருப்பினும் இந்த தலத்திற்கு வந்து இந்த மகா யாகத்தின் போது எழுகின்ற அற்புத கதிர் வீச்சுகளை எவனொருவன் நுகர்கின்றானோ அன்னவனுடைய உடலில் இருக்கின்ற நோய்கள் எல்லாம் நீங்கும் என்பது தான் உண்மையடா. தற்போது உலகத்தில் மிகப்பெரிய எதிரியாய் காணப்படும் புற்று நோய்கான தீர்வும் இத்தலத் திலே உண்டு என்பதை அறிவாயப்பா. புற்று நோய் கொண்ட ஒரு மாந்தன் இத்தலத்திற்கு அருகே அமர்ந்து இந்த மகா யாகத்தின் போது இச்சூழலில் அமர்ந்து சுவாசித்தாலே போதுமப்பா. அன்னவன் உடலிலே இருக்கின்ற எதிர்வினை கதிர்கள் யாவும் நிச்சயமாய் நீங்கிப் போகும்..

இத்தலத்திலே பஞ்சதேக மூர்த்தியாய் அமரும் ஸ்வாமியும், பஞ்சதேக மூர்த்திக்கு துணையாய் பாலாம்பிகையும் வீற்றிருப்பதால் எட்டுத்திக்கிலும்

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
what-up no: 7299992699
aanmeegamalar@gmail.com

இருக்கும் பரம யோகிகளும் அங்கு வந்து அடைவார்களப்பா. இதுவும் இறை சூட்சமப்பா. இத்தலத்தில் இருந்து எவ னொருவன் மகா யாகத்தை தரிசனம் செய்து எம்மை பிரார்த்திக்கின்றானோ அன்னவனுடைய பாவ சக்திகளில் இருந்து விடுபடுகின்றான். யாங்கள் கைலையிலேயே இதை யாங்கள் சூக்கும சித்தால் இந்நிகழ்வை இத்தலத்திற்கு மாற்றி யிருக்கிறோமடா இதை. போதுமப்பா கருணையே இத்தலத்தில் நடக்கின்றன தருமங்கள் எல்லாம் விரைந்து நிறைவேறட்டுமப்பா. என் ஆசி எப்போதும் இறை ஆசியோடு கலந்து பிரபஞ் சத்தில் இருக்கின்ற மக்களுக்கு உண்டடா.

கருணையே எக்காரணம் கொண்டும், கருணையே எக்காரணம் கொண்டும் உரைக்கின் றேன் கேளடா. இத்தலத்தில் இருந்து கொண்டு பூமியில் உள்ள கலியுக மாந்தர்கள் எல்லாம் நான் சித்தன் என்றும், மற்றும் சித்தனை பூசை செய்பவன் எல்லாம் சித்தன் என்றும், மகா யாகங்களை செய்தவனெல்லாம் சித்தன் என்றும், நான் அகத்தியன் மறு அவதாரம் என்றும் எவனொருவன் கூறுகின்றானோ அவனெல்லாம் பொய் என்பதை அறிவாயடா.

எவனொருவன் தன்னை அறிந்து கொண்டு உலக நன்மைக்காக பாடுபடுகின்றானோஅவனே எங்களால் உணரப்படுகின்றான். எங்களால் உணர்த்தப்படு கின்றான், எங்களால் உயர்த்தப்படுகின்றான் என்பதை அறிந்து கொள்வாய். கருணையே பரிபூரண நல்லா சிகளப்பா இத்தலமதில் இருந்து. பரமபவித்திரமான மூலிகைகளை சேகரித்துக் கொண்டிருக்கிறாய். அத் தனையும் கடல் கடந்து சென்று சேருமப்பா. என்ஆசி எப்போதும் உந்தனுக்கு உண்டடா.பரிபூரணஆசிகள்.

மேலும் இந்த யாகத்தைப் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ளவும், கலந்து கொள்ளவும் அனுகவும்....

AGASTHIYA KIRUPA, Tamil Nadu -INDIA.

Contact:+919894109686





உலக வரலாற்றில் முதன் முறையாக



இலவச e-mail-book

எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற

உங்கள் இ-மெயில் முகவரியை

கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

Whatsup no.7299992699
aanmeegamalar@gmail.com

முடிந்த அளவு Share செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்



# பல்வேறு இன்னல்களை தீர்க்கும் பள்ளியறை பூஜை

பள்ளியறை பூஜை என்பது திருக்கோயில்களில் வீற்றிருக்கும் மூலவரை தாலாட்டுப்பாடி அவருக்கு ஓய்வு தரும் ஒரு நிகழ்ச்சியாகவே நடைபெற்று வந்தது.

நமது தமிழ்நாட்டில் இருக்கும் 38,000 பழமை யான ஆலயங்களில் 27,000 ஆலயங்கள் சிவால யங்கள் ஆகும். 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை பள்ளியறை பூஜை அனைத்து ஊர்களிலும், அனைத்து ஆலயங்களிலும் நடைமுறையில் இருந்து வந்தது; தற்போது இந்த முறை மிகவும் அருகிக் கொண்டிருக்கின்றது.

தமிழ்நாட்டில் எந்த ஊர்களில் எல்லாம் பள்ளியறை பூஜை நடைபெறவில்லையோ அந்த ஊர்களில் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் தம்பதிகள் பெருமளவு குறைந்துவிட்டார்கள்.

மேலும் தற்போது பல்வேறு புதுப்பிப்பு போன்ற காரணங்களால் பல சிவாலயங்களில் பள்ளி யறையே இல்லாமல் போய்விட்டது. பள்ளியறைப் பூஜைக்கு சிவபாத பூஜை என்று ஒரு பெயர் உண்டு.

## பள்ளியறை பூஜை செய்யும் முறை:

இரவுக் கால பூஜை சிவாலயத்தில் நிறைவு ஆனப் பின்னர், ஈசனுடைய திருப்பாதத்திற்கு அரிய அலங்காரம் செய்ய வேண்டும்; அந்த அலங்காரம் செய்த திருப்பாதத்தை பல்லக்கில் வைத்து கோவிலுக்குள் வலம் வரவேண்டும்; அப்படி வலம் வரும் போது, நாதஸ்வரம், சங்கு, உடுக்கை, பேரிகை, துந்துபி, மத்தளம் மற்றும் திருக்கையிலாய வாத்தியம் என்று அழைக் கப்படும் பஞ்சவாத்தியங்கள் இசைக்க வேண்டும்.

(குறிப்பு: மேற்கண்ட இசை வாத்தியங்களை யார் ஒருவர் சம்பளம் வாங்காமல் ஒரு பிறவி முழுவதும் இசைக்கின்றார்களோ, அவர் களே சிவலோகம் என்று அழைக்கப்படும் திருக் கையிலாயத்தில் இசைக்கும் கணங்களாக சிவலோக பதவி கிடைக்கும் என்று புராணங்கள் கூறுகிறது)

ஒவ்வொரு தினமும் ஒரு சில நல்ல செயல் களையாவது செய்தோம் என்ற மன நிறைவு உடன் காலதேவனாகிய மஹாகால பைரவப் பூஜைக்குரிய பொருட்களை தானம் செய்து, அதில் கலந்து கொள்பவர்கள் அதன் பிறகு தமது வாழ்க்கையில் மகத்தான திட்டங்களை தங்கு தடையின்றி செயல்படுத்தி வெற்றி காண் பார்கள்;

ஆயில்யம், கேட்டை, மூலம், பூராடம் நட்சத்திரங்களில் பிறந்த பெண்கள் ஒரு வருடம் வரை தினமும் பள்ளியறை பூஜையில் கலந்து கொள்ள வேண்டும். ஆயில்யம் நட்சத்திரமும், செவ்வாய்க்கிழமையும் வரும் நாளன்று பள்ளியறை பூஜைக்குத் தேவையான பொருட்களை அன் பளிப்பாக தந்து, அவசியம் கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் சிறந்த வாழ்க்கைத் துணை அமையும்.

அரசு மற்றும் தனியார்த் துறையில் பதவி உயர்வுக்குக் காத் திருப்பவர்கள் புதன் கிழமையன்று பள்ளியறை பூஜைக்குத் தேவையான பொருட்களை வாங்கித் தருவதோடு, கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

அனைத்துவிதமான சித்திகளும் கிடைக்க பலர் பல பிறவிகளாக முயற்சி செய்து கொண்டே இருக்கின்றார்கள், அவர்கள் தொடர்ந்து ஒருவருடம் வரை தினமும் பள்ளியறை பூஜையில் கலந்து கொள்ள வேண்டும், மேலும் அனுஷம் நட்சத்திரமும் வியாழக்கிழமையும் வரும் நாட்களில் பள்ளியறை பூஜைக்குத் தேவையான பொருட்களை தம்மால் முடிந்த அளவுக்கு காணிக்கையாக கொடுத்தால் மேற்கண்ட அனைத்து வித சித்திகளையும் அடைய வழி ஏற்படும்.

கணவனுக்கு ஏற்பட்ட நோய் தீரவேண்டு மானால், வெள்ளிக்கிழமை நடை பெறும் பள்ளியறை பூஜை யில் பெண்கள் கலந்து கொண்டால் நோயின் தாக்கம் குறையும். விரை வில் பூரண குணமும் கிடைக்கும்.

குழந்தை பாக்கியம் பெற சனிக்கிழமைகளில் நடைபெறும் பள்ளியறை பூஜையில் தம்பதி சமேதராக கலந்து கொண்டால் புத்திர பாக்கியம் கிடைக்கும்.

பிரிந்த வாழ்க்கைத் துணை சேரவும்,காணாமல் போய் பல ஆண்டுகள் என்ன ஆனார்கள் என்பதை அறியவும், அறிந்த பின்னர் திரும்பி வரவும் மூன்றாண்டுகள் வரை தினமும் பள்ளி யறை பூஜையில் கலந்து கொள்ள வேண்டும், அசுபதியும் ஞாயிற்றுக்கிழமையும் வரும் நாட்களில் பள்ளியறை பூஜைக்குத் தேவையான பூக்கள், பால், நைவேத்தியம் போன்ற வற்றை கொடுக்கலாம்.

பள்ளியறை பூஜையில் கர்ப்பிணிப் பெண்கள் கலந்து கொண்டு, அதன் முடிவில் பசுவுக்கு பழங் கள் கொடுத்துக் கொண்டு வந்தால், சுகப்பிரசவம் ஏற்படும். நைவேத்தியப் பாலை பலருக்கும் தந்தால் அவர்களுக்கு வலியில்லாத பிரசவம் உண்டாகும்.

குழந்தை பிறக்கும் தருணத்தில் இறை சிந்தனை உண்டாகும். இப்படிப்பட்ட சிந்தனை உண்டானால், அவர்களுக்கு பிரசவ வைராக்கியம் உருவாகு வற்குப் பதிலாக முக்தி வைராக்கியம் உண்டாகும்;

பள்ளியறை பூஜையிலும், அதன் நிறைவுப் பகுதியிலும் அன்னதானம் செய்பவர்கள் தொழி லில் அமோக வளர்ச்சியை அடைவார்கள்.

பள்ளியறை பூஜைக்கு எண்ணெய்,நெய் தொடர்ந்து தருபவர்களுக்கு முதுமைக்காலத்தில் கண் சார்ந்த வியாதிகள் ஒருபோதும் வராது.

கால ஓட்டத்தால் தற்போது பல்வேறு சம்பிர தாயங்கள் திருக்கோயில்களில் நடைபெறாமல் மறைக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த பள்ளியரை பூஜையை நமக்கு அருகில் உள்ள கோவில்களில் நடைபெற நாமும் ஒருவகையில் துணை நிற்போம்.

**தமிழ்நாட்டில் எந்த ஊர்களில் எல்லாம் பள்ளியறை பூஜை நடைபெறவில்லையோ அந்த ஊர்களில் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் தம்பதிகள் பெருமளவு குறைந்துவிட்டார்கள்**

# யோகி ராம்சுரத்குமார்

## வாழ்க்கை வரலாறு சிறு தொடர்

### தொடர் 2

பள்ளி நிர்வாகத்தின் அலட்சியத்தை எதிர்த்த ராம்சுரத்குன்வர் மீது பள்ளி நிர்வாகம் எகிறியது. ஆனால், இவர் விடாப்பிடியாக நின்றார். ஊர் மக்கள் ஒன்றுகூடி நிர்வாகத்திடம் பேச, ஊரும் நிர்வாகமும் ஒன்று சேர்ந்து பள்ளிக்கூடத்தை ஒழுங்குப்படுத்தியது. ராம்சுரத்குன்வர் போராடி வெற்றி பெற்றார். இந்த விஷயம் அவரை உற்சாகப்படுத்தியது. எந்த ஒரு விஷயத்தை வெற்றி கொள்ள வேண்டுமென்றாலும் அதை நோக்கி முனைப்பாகவும், வேகமாகவும், விடாப்பிடியாகவும், உண்மையோடும், உறுதியோடும் இருக்க வேண்டும் என்பது புரிந்தது. இதைத்தான் கடவுள் தேடலிலும் கைக்கொள்ள வேண்டும் என்று அவர் புரிந்து கொண்டார்.

பள்ளிக்கூடம் நடக்கத் துவங்கியது. சிறிய வருமானம்; ஆனாலும், வாழ்க்கை சந்தோஷமாக நகர்ந்தது. சிறிது காசு சேர்த்தால், கோடை விடுமுறையில் ஊர் சுற்றலாமே என்ற எண்ணம் ஏற்பட்டது.

தெற்கே சாதுக்களும், மகான்களும் அதிகம் அப்படிப் போவதுதான் நல்லது என்று உணர்த்தப்பட்டது. திருவண்ணாமலை பகவான் ஸ்ரீரமண மகரிஷி, ஸ்ரீஅரவிந்தர் என்ற பெயர்கள் அவருக்குச் சொல்லப்பட்டன. அவ்வாறே, தெற்கே போக ரயில் ஏறினார். டிக்கெட்டையும் பணப்பையையும் பத்திரமாக வைத்துக் கொண்டார். ஆனால், மூன்று ரயில் நிலையங்கள் தாண்டுவதற்குள் டிக்கெட்டும் பணப்பையும் காணாமல் போயின! பதறிப் போய் நான்காவது ரயில் நிலையத்தில் கீழிறங்கினார்.

என்ன செய்வது? ரமண மகரிஷியைத் தேடிப் போவதா அரவிந்தரை நோக்கிப் போவதா மௌனமாக வீடு திரும்புவதா? ஆரம்பித்த காரியம் சுணங்குகிறதே. ஏன் இப்படி? கடவுள் தேடலை கடவுளே விரும்பவில்லையோ..?

தயங்கினார்; குழம்பினார்.

எது தடுத்தாலும், எவர் தடுத்தாலும் ஸ்ரீரமணரை நோக்கிப் போவேன் என்ற பிடிவாதம், வைராக்கியம் உள்ளே ஏற்பட்டது. ஆனால், டிக்கெட் இல்லாமல் பயணிக்க விரும்பவில்லை. அங்கு உள்ள பள்ளிக்கூடத்துக்குப் போய், ஆசிரியரிடம் கை கூப்பினார். தனது நிலைமையைச் சொன்னார்.



ஆசிரியர் அவரை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த, அந்த மாணவர்கள் எதிரே ஆசிரியர் ராம்சுரத்குன்வர் கைகூப்பி, தன் நிலையைச் சொல்லி, பள்ளி மாணவர்கள் உதவினால் அதை வைத்து, பயணச்சீட்டு வாங்கி தொடர்ந்து பயணம் மேற்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். மாணவர்கள் காலணா, அரையணா, இரண்டணா கொடுத்து அவரை ரயிலேற்றி அனுப்பினார்கள்.

யார் கையேந்திக் கேட்கிறார்களோ, அவர்களுக்கே கடவுள் தன்மை இடப்படும். எனவே, கையேந்திக் கேட்கின்ற பணிவை முதலில் கொள்ள வேண்டும். தான் ‘ஆசிரியர்’ என்ற அகந்தையைத் தூக்கி எறிந்து, அந்த மாணவர்களிடம் மெள்ள கை கூப்பிக் கெஞ்சிய ராம்சுரத்குன்வருக்கு புதிய பாதை திறந்தது.

கடவுள் தேடுதலுக்கு முதல் படியான கர்வம் அழித்தல் அங்கே தானாக, இயல்பாக நடந்தது. ஆசிரியர் என்ற அலட்டலில் இருந்து விடுபட்டு, யாரிடம் அவர் அதிகாரம் செலுத்த முடியுமோ அந்த மாணவர்கள் கொடுத்த காசைக் கொண்டே தன் கடவுள் தேடலைத் தொடர்ந்தார், ரயில் திருவண்ணாமலை வந்தடைந்தது.

ஸ்ரீரமண தரிசனம் அற்புதமாக அமைந்தது. இவரே! இவரே! இவரே என் குரு என்ற மிகப் பெரிய கேவல் எழுந்தது. அதே நேரம் ஸ்ரீஅரவிந்தரைப் பற்றி அறிந்து, பாண்டிச்சேரியை நோக்கி பயணப்பட்டார். ஆனால் அவரை தரிசிக்க முடியவில்லை. ஆனாலும், சூட்சுமமாக அரவிந்தர் தரிசனம் கிடைத்தது. மறுபடி திருவண்ணாமலை வந்தார்.

ஊருக்குப் போக எண்ணம் எழுந்தது. மறுபடியும் ரயில் ஏறினார். மீண்டும் இல் வாழ்க்கை நடத்த வேண்டிய இருக்கிறதே என்ற கலக்கம். கடவுளைத் தேடுபவர் வெளியே அலைய அலையத்தான் உள்ளுக்குள் போக முடியும். வெளியே கடவுள் இல்லை; உள்ளே தன் உள்ளத்தில் இருக்கிறார் என்பதை, அலைந்து தான் தெரிந்து கொள்ள முடியும்.

அடுத்த விடுமுறையில் வடக்கே பயணப்பட்டார். இமயமலைச் சரிவுகளில் அலைந்தார். அதே நேரம் திருவண்ணாமலையில் ஸ்ரீரமண மகரிஷி முக்தியடைந்தார்; பாண்டிச்சேரியில் அரவிந்தர் மறைந்தார் என்பது தெரிய வர, இடிந்து போனார். அற்புதமான இரண்டு ஞானிகளுடன் நெருங்கி இல்லாமல், மறுபடியும் குடும்ப பாரம் இழுக்க வந்தேனே என்று கவலைப்பட்டார்.

அப்போது பப்பா ராம்தாஸ் என்ற பெயர் காதில் விழுந்தது. மங்களூருக்கு அருகில் கஞ்சன்காடு என்ற இடத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டார். அவரை இழக்க விரும்பவில்லை. எனவே ராமதாஸை நோக்கி விடுமுறையில் பயணம் துவங்கினார். ராமதாஸின் ஆஸ்ரமத்தில் தங்கினார். பப்பா ராமதாஸ் அவருக்கு ராம நாமம் உபதேசித்தார். “இடைவிடாது ராம நாமம் சொல்” என்றார். ராம்சுரத்குன்வர் குருவின் கட்டளையை மீறவில்லை. ராம நாமம் அவருக்குள் மிக விரைவிலேயே மாற்றத்தை ஏற்படுத்தியது. அவரின் உள்ளொளி விகசித்துப் பொங்கியது. உடுப்பதும் உண்பதும்கூட மறந்து, ராம நாமம் சொல்வதே வேலையாக இருந்தது.

உள்ளுக்குள் ராம நாமம் பொங்க, எந்த நியதிக்கும் அவரால் கட்டுப்பட முடியவில்லை; எதுவும்புலப்பட வில்லை. அவர் தன்வசம் இழந்தவராக, சின்மயமானவராக எல்லா இடத்திலும் இருப்பவராக உணர்ந்தார். ஆனால், பொது வாழ்க்கையில் இந்த நிலை பித்து என்று வர்ணிக்கப்படும். பைத்தியக்காரன் என்ற பட்டப்பெயர் கிடைக்கும். ராம்சுரத்குன்வருக்கும் இப்படி பட்டப்பெயர் கிடைத்தது. அதனால், ராம்சுரத்குன்வர் ஆஸ்ரமத்தில் இருந்து மென்மையாக வெளியேற்றப்பட்டார்.

உன்மத்த நிலையோடே வீடு வந்தார். வீடு அவரை விநோதமாகப் பார்த்தது. மனைவி கவலையானார். அவரை சரியான நிலைக்குக் கொண்டுவர முயற்சித்தனர். ஆனால் உன்மத்தம் அதிகமானது. கிராமத்தின் மரத்தடி களில் அமர்ந்து வேலைக்கு போகாமல் திரும்பத் திரும்ப ராம நாமமே சொல்லிக் கொண்டிருந்தார். தன்னந்தனியே கங்கைக்கரையோரம் திரிந்து கொண்டிருந்தார்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

– கௌரி பிரகாஷ், செல் 9841920503


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# திருவண்ணாமலை கிரிவல மகிமை

திருஅண்ணாமலையில் கிரிவலம் சென்றால் செல்பவருடைய அத்தனை பிறவி வடிவங்களும் கூடவே சேர்ந்து வருகின்றன. ஒவ்வொருவரின் ஒட்டு மொத்தப் பிறவிச் சாரமே கூடவே சேர்ந்து அருணாச்சலத்தை வலம் வருமாம்!!!

இதற்குக் காரணம், அத்தனை கோடிப் பிறவிகளுக்கும் முற்றுப்புள்ளி இடும் ஆன்மசாதனமே அண்ணாமலை கிரிவலம் என்பதால்தான்!

நமது பிரபஞ்சத்தில் அருணாச்சலமான திரு அண்ணாமலையில் மட்டுமே இது சாத்தியமாகும். பவுர்ணமி தினம் போன்று மாதசிவராத்திரி நாளிலும் அருணாச்சல கிரிவலத்தைக் கடை பிடிக்க வேண்டும்.

## நாம் செய்யும் தானத்தில் மிகச் சிறந்தது அன்னதானம்

கலியுகத்தில் நம் ஒவ்வொருவருடைய கர்மவினைகளையும் அடியோடு மாற்றும் வல்லமை அன்னதானத்திற்கு உண்டு; கட்டாயப்படுத்தி அன்னதானம் செய்யக் கூடாது; அசைவ அன்னதானம் செய்யக் கூடாது; அரைகுறை மனதுடன் அன்னதானம் செய்யக் கூடாது; நமது குல தெய்வம் கோவிலில் அன்னதானம் செய்யலாம்; உள்ளூர் சிவாலயத்தில் தினமும் அன்னதானம் செய்யலாம்; மிகவும் தலைசிறந்த அன்னதானம், துவாதசி திதி அன்று அண்ணாமலையில் செய்யப்படும் அன்னதானமே!!!

ஒரு தமிழ் ஆண்டில் 8 முதல் 10 முழுத் துவாதசி திதி நாட்கள் மட்டும் தான் வரும்; இந்த நாட் களில் காலை 6 முதல் 7 மணிக்குள் குறைந்தது 18 சாதுக்களுக்கும், மதியம் 1 முதல் 2 மணிக்குள் குறைந்தது 18 சாதுக்களுக்கும்,இரவு 7 முதல் 8 மணிக்குள் குறைந்தது 18 சாதுக் களுக்கும் அன்னதானம் செய்ய வேண்டும்; அதன் பிறகு,கிரிவலம் வரவேண்டும்; இப்படிச் செய்தால் மறுபிறவியில்லாத முக்தி கிட்டும் என்று அருணாச்சல புராணம் தெரிவிக்கின்றது.



## சித்திரா பௌர்ணமி அன்று வெளிவரும் உப்பு

சித்ரா பவுர்ணமியன்று இரவில், ஒரு சில பகுதிகளில் பூமியிலிருந்து ஒருவகை உப்புவெளிப்படும். இதை பூமிநாதம் என்று சொல்வர். இந்த உப்பு, சித்தமருத்துவத்துறையில் முக்கிய இடத்தைப் பெறும் இது மூலிகையிலுள்ள ஜீவசக்திகள் வீரியத்துடன் விளங்க உதவுகிறது. இந்த உப்பு, சித்ரா பவுர்ணமியன்று வெளிப்படுவதை முதன்முதலில் கண்டறிந்தவர்கள் சித்தர்களே.






# மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 9,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

whatsapp: 7299992699 / 9841807572

aanmeegamalar@gmail.com

# இறைவனை ஒருபோதும் மறவாதீர்கள்

பாகம் 9



பரமஹம்ஸர் கூறுகிறார்: " நான் என்ன அனுபவித்திருந்தாலும்சரி, எனது ஆனந்தமானது என் எண்ணங்கள் என்னும் மணல்களுக்குக் கீழ் இடைவிடாது பாய்ந்து கொண்டிருக்கும் ஓர் அமைதியான நீரோட்டம் போன்று இருந்து வருகின்றது. இந்த தெய்வீக ஆனந்தத்தின் அமைதியான நதிகளை கண்களினால் பார்க்க முடியாது. ஆனால் உணர்வுநிலையின் வெளிப் புற அடுக்கு நிலையின் ஊடாக நீங்கள் ஆழமாகத் தோண்டும் போதெல்லாம், அதைக் கண்டுபிடிப்பீர்கள். இறைவனுக்காக எவ்வளவு ஆழமாக நீங்கள் ஏங்குகிறீர்கள் என்று வேறு எவரும் அறியவேண்டாம். பிரபஞ்சத்தின் தலைவன் உங்கள் அன்பை அறி வான்; மற்றவர்களின் முன் அதை காட்சிப் பொருளாக்காதீர்கள். இல்லையேல் அதை நீங்கள் இழக்க நேரிடலாம்."

"ஆன்மாவின் அமைதியிலும், வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அகமுகமாகத் திரும்பி "தெய்வீகத் தந்தையே, நான் உன்னை மறக்கவில்லை" என்று நீங்கள் கூறும்போது அத்தகைய பக்தி உங்கள் இதயத்தின் ஆழங்களிலிருந்து சுரக்கும்போது உங்கள் அன்பின் நீரூற்றிலிருந்து பருக இறைவன் வருகிறான். வாழ்வின் ஒரே நோக்கம் அவனை உணர்ந்து மகிழ்வதுதான். இது சாத்தியம். அவனுடைய எல்லையற்ற மகிழ்ச்சி மற்றும் ஆனந்தத்தைப் பற்றி நான் அறியவில்லையெனில் நான் அதைப் பற்றிப் பேசமாட்டேன். நீங்களும் அவனை காணவேண்டும். இறைவன் இருக்கி றான். மகான்கள் உங்களிடம் பொய் கூறவில்லை. நானும் உங்களிடம் பொய் உரைத்துக் கொண்டிருக்கவில்லை. பிறகு ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும்? அவனை மறந்தவர்களுக்காக ஏன் இருக்க வேண்டும்? விளைவுகள் எவ்வளவு பயங்கரமானவை என்பது எனக்குத் தெரியும். மகிழ்ச்சியின் அந்த அக ஆதாரத்தைப் பற்றிய மறதிதான் அனைத்து மனித வேதனைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணம்."

மேலும் அவர் கூறுகிறார்: " இறைவனுடைய கொடைகளான இந்த வாழ்க்கை மற்றும் சூரியன், உணவு மற்றும் அவன் நமக்கு அளித்தருளும் எல்லா பொருட்களையும் பெறுவதற்காக நாம் நமது கைகளை ஏந்துகிறோம். ஆனால், அவற்றை நாம் பெற்றுக்கொள்ளும் அச்சமயத்தில் கூட கொடையாளியைப் பற்றி நினைக்காமல் இருக்கிறோம். நீங்கள் அன்புடன் யாருக்காவது பரிசுகளை கொடுத்திருந்து, பிறகு அவர் உங்களை என்றும் நினைப்பதே இல்லை என்று தெரிந்துகொண்டால், உங்கள் மனம் எவ்வளவு பாடுபடும்! இறைவனும்கூட அதே மாதிரிதான் வருந்துகி'றான். உலகத்தைக் காண்பதற்கு பார்வை என்னும் அவனது பரிசை தினந்தோறும் பயன்படுத்துகிறோம்; சிந்தனை மற்றும் பகுத்தறிவு என்னும் அவனது பரிசுகளை ஏற்றுக்கொள்கிறோம்; ஆனால் அவனைப் பற்றிய மறதியிலேயே இருக்கிறோம். இறைவன் எப்போதாவது பிச்சைக்காரனாக இருப்பானேயானால், அது உங்கள் அன்பை வேண்டுவதற்காகத்தான். அவன் இடைவிடாமல் உங்களை தொடர்ந்து கொண்டே இருக்கிறான்; அவன் மகான்களின் அமுதமொழிகள் மூலமாக இனிமையாகப் பேசுகிறான். அவனை புறக் கணிக்காதீர்கள்!"

## வாழ்க்கையின் நோக்கம் இறைவனை காண்பதே

அவர் கூறுகிறார்: "வாழ்க்கையின் ஒரே நோக்கம் இறைவனை காண்பது தான். நீங்கள் திருமணமானவரானால், நீங்களும் உங்கள் அன்புக்குரியவரும் ஒன்று சேர்ந்து இறைவனை தேடவேண்டும். திருமண மாகாதவரானால் " இறைவனின் ராஜ்ஜியத்தை முதலில் தேடுங்கள். அவனை தெரிந்துகொண்ட பிறகு என்ன செய்யவேண்டும் என்று அவன் உங்களுக்குக் கூறுவான். திருமணத்தில் என்ன விதிப்பயன் காத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. என் செவிக்கு வரும் சோகக்கதைகள் கற்பனைகூட செய்ய முடியாது! மனித இணக்கமின்மையின் பயங்கரமான கதைகள். இளமைக் காலத்தில் தங்கள் உணர்ச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். முதலில் தனது உணர்ச்சித்தூண்டுதல்களை கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்ளாமல், எவரும் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று நான் நினைக்கிறேன். ஒருவர் உணர்ச்சிரீதியாக ஸ்திரமாகும்வரை, ஒரு குடும்பத்தை அமைக்க அவர் தகுதியில்லாதவராகிறார். சுயகட்டுப்பாட்டை பெற்றிருப்பதுதான் மிகப்பெரிய விஷயம்; அதற்குப் பிறகு நீங்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், பொருத்தமான நபர், காந்தமாக உங்களது வாழ்க்கைக்குள் ஈர்க்கப்படுவார்".

## தெய்வீக அன்பின் காதல் காவியம்

மேலும் அவர் கூறுகிறார்: "உங்களுடைய வாழ்க்கையை சீர்படுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு இரவும் அவனுடன் ஆழ்ந்த இறைதொடர்பு கொள்ளுங்கள்; அவனுடன் பேசுங்கள். அவனிடம் உண்மையாக பிரார்த்தனை செய்யுங்கள். அரைமனது பிரார்த்தனையை விட்டொழியுங்கள். ஒருமுறை நான், " அம்மா, உனக்கு கொடுத்தேன் என் ஆன்மாவின் அழைப்பு" என்ற பாடலை எழுதி முடித்த தருணத்தில் வானிலிருந்து வெளிப்பட்ட தெய்வீக அன்னையின் ஓர் அற்புதமான தோற்றத்தைக் கண்டேன்! நான் அவளை எல்லாயிடத்திலும் எல்லா பொருளிலும் கண்டேன். அவளை வணங்கித் தொழுதேன். அவள் என்னை ஆசீர்வதித்து என்னிடம் பேசினாள். மிகச்சிறந்த காதல் காவியம் எல்லையற்ற இறை வனுடன்தான் உள்ளது. "புறப்பொருட்களில் மனம் பற்றாதவன் ஆத்மாவில் இன்பம் எய்துகி றான். பிரம்மசமாதியில் மனதையுடைய அம்மனிதன் அழியாத சுகத்தை அடைகிறான்" என்று ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு கூறியுள் ளார். (பகவத்கீதை) நீங்கள் திடீரென்று இறைவனை எங்கும் காணும்போது அவன் வருகை புரிந்து, உங்களுடன் உரையாடி உங்களை வழிநடத் தும்பொழுது தெய்வீக அன்பின் காதல் தொடங்கி விடுகிறது.

## இறைவனை புறக்கணிப்பது விவேகமல்ல

பரமஹம்ஸர் கூறுகிறார்: "அவனது சித்தத் தின்படி நடப்பதும் மற்றவர்களை மீண்டும் அவனிடம் கொண்டுவர நேரடியாக உதவி செய்வதும் உண்மையான விவேகமல்லவா?

## மனித வாழ்வு மேம்படுவதற்காக

# பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

எனது மிகப்பெரிய சந்தோஷம், மற்றவர்களுக்கு இறைவனின் முக்கியத்துவத்தையும் அவனை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டியதின் அவசியத்தையும் நினைவுபடுத்துவதுதான். இந்த உலகம் ஓர் அந்நிய தேசம். நாம் நமது சொந்த பேரில்லத்தில் இல்லை. ஒரு நொடிப்பொழுதில் நீங்கள் இந்த உலகைவிட்டு நீங்க வேண்டியிருக்கும். உங்களுடைய எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்யவேண்டியிருக்கும். பிறகு ஏன், வேறு எந்த வேலைக்கும் முதன்மையான முக்கியத்துவத்தை அளித்து, அதன் பயனாக உங்களுக்கு இறைவனுக்கென நேரம் இல்லாதவாறு செய்ய வேண்டும்? இது விவேகமல்ல. நம் மீது வீசப்பட்டுள்ள பிரபஞ்ச மாயவலை என்னும் மாயையின் காரணமாக, நாம் நம்மையே உலக ஆசைகளில் சிக்க வைத்துக்கொண்டு இறைவனை மறந்துவிடு கிறோம். அறியாமை, தேக அமைப்பில் மிகக் கடுமையான விஷம் போன்றது. அதன் காரணமாக இறைவனின் பிரதிபிம்பத்தில் படைக்கப்பட்டுள்ள நாம் நமது உண்மையான இயல்பை அறிந்துகொள்வதில்லை. அறியாமை இருக்கும்வரை எத்தனை பிறவிகளின் துன்பங்கள் எதிர்காலத்தில் உங்களுக்காக இருக்கிறது என்பதை நீங்கள் சொல்ல முடியாது. நீங்கள் நன்றாகவும் வலிமையுள்ளவராகவும் இருக்கும்பொழுது முட்டாள்தனத்தில் உங்கள் காலத்தை கழித்துவிடாதீர்கள். இறைவன் எல்லாவற்றையும் புரிந்துகொள்கிறான். நம்மை இந்த பயங்கரமான இடத்திற்கு அவன்தான் அனுப்பியிருக்கிறான் என்பது அவனுக்குத் தெரியும். நம் துன்பங்களின்போது அவன் தன் இதயத்தில் வேதனைப்படுகின்றான். நாம் மாயையாகின்ற சேற்றில் உழன்றுகொண்டிருப்பதைக் காண்பதைவிட வேறெதுவும் அவனை அதிகமாக புண்படுத்தாது. நாம் பேரில்லத்திற்கு திரும்பி வரவேண்டும் என்று அவன் விரும்புகிறான். மேலும் அவனை அறிந்துகொள்ள முயற்சி செய்பவர்களுக்கு அவன் மறுமொழி அளிக்கிறான்: "நான் அவர்களுக்கு அருளால் இரங்கி அவர்கள் உள்ளத்தில் வீற்றிருந்து, மெய்ஞானச்சுடர் விளக்கால் அஞ்ஞானத்திலிருந்து உதித்த ஆரிருளை அகற்றிவிடுகிறேன்" என்று ஸ்ரீகிருஷ்ணன் பகவத் கீதையில் அருளியிருக்கிறார்." (பகவத்கீதை)

"இறைவனை நோக்கி தாம் வந்த வழியே திரும்பிச் செல்லும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவதைகள் மத்தியில் மிகப்பெரிய கொண்டாட்டம் உள்ளது. அவர்கள் உண்மையாகவே தோன்றி திரும்பிவரும் அந்த ஆன்மாவை பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்."

இறைவனுடன் இணைந்த, இறைவனை உணர்ந்த ஒரு குருவின் நோக்கம் என்னவெனில், மனித குலத்தை மேம்படுத்தி இறைவனுடன் சேர்ப்பது தான். ஒரு மனிதனை குருவானவர் இறைவனுடன் இணைப்பதற்கு முடிவு செய்து கொண்டால் அந்த மனிதனின் சிறு சிறு குறைகளையெல்லாம் அவனிடமிருந்து அகற்றி அவன் மனதை சீர்செய்து அவனுடைய ஆன்மீக வாழ்க்கைத்தரத்தை உயர்த்திவிடுவார். அதன்பின்னர் அந்த மனிதனுக்கு என்ன தேவையோ அதைக் கொடுத்து இறைவனுடன் இணைவதற்கு தகுதியுள்ளவனாக மாற்றிவிடுவார். இவ்வாறு மனிதகுலத்தை இறைவனுடன் சேர்ப்பதை ஒரு மிகப்பெரிய சேவை இறைவனுக்குச் செய்யும் சேவையாகக் கருதுகிறார் குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர். அதைப்பற்றி திரு.ரஜினிகாந்த் அவர்கள் பரமஹம்ஸரின் தெய்வீகக்காதல் புத்தக வெளியீட்டின்போது கூறிய கதையுடன்கூடிய மற்றொரு கருத்தினை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறேன்.

"யோகானந்தர் மாதிரி ஒரு மகான் பிறப்பது அபூர்வம்; அரிது. ஆண்டவனுடைய அருளால்தான் இவர் போன்ற மகான்கள் பிறக்கிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு கதை சொல்லுவார், ஒரு முறை மனிதர்கள் பலபேர் சேர்ந்து சென்றுகொண்டிருக்கும்போது, வழியில் ஒரு பெரிய சுவரைக் கண்டனர். அந்தச் சுவர்மேல் ஏறுவது மிகவும் கடினம். அதற்கு ஒரு யுக்தி இருக்கிறது. சில பேரால் மட்டும்தான் அந்தச் சுவர்மேல் ஏறமுடியும். ஒருவன் அந்தச் சுவர்மேல் ஏறி நின்றுகொண்டு சுவரின் மறுபக்கம் பார்த்தான். அவன் "ஓ மை காட்" என்று சொல்லிவிட்டு சுவருக்கு மறுபக்கம் குதித்தான். இன்னொருத்தனும் ஏறினான். ஏறிவிட்டு. அவன், "ஓ மை காட், வாட் ஏ சீன் (What a scene)?' என்று சொல்லிவிட்டு சுவருக்கு மறுபக்கம் குதித்தான். கீழே இருந்தவர்கள் "என்னைய்யா இது? ஒன்றுமே சொல்லமாட்டேங்கிறார்களே; சுவர்மேல் ஏறியவர்கள் எல்லாம் அப்படியே குதித்துக் கொண்டனர். பார்த்தால் "Oh my God, What a scene?" என்று சொல்லிக் கொண்டு குதிக்கிறார்கள்" என்று எண்ணினர். இந்தக் கூட்டத்தில் வந்த ஒருவன் சுவர்மேல் ஏறி, மேலே வந்து பார்த்தான். இங்கே இன்ன இன்னது இருக்கிறது, இப்படி இப்படி இருக்கிறது, அங்கே இருக்கிறது எல்லாம் தெரிகிறது. அங்கே அரண்மனை இருக்கிறது" என்று சொன்னான். அது ஒரு மகான்."

"சில மகான்கள் தன் ஆத்மா இறைவனை கண்டபின்னர் வெளியே சொல்லமாட்டார்கள். அப்படியே ஆண்டவனுடன் ஐக்கியமாகி விடுவார்கள். சிலபேர் அங்கே வந்து உட்கார்ந்துவிட்டு, இங்கே இப்படி இப்படி இருக்கிறது; இப்படி இப்படி செய்யவேண்டும் என்று சொல்லு வார்கள். சில பேர் கீழே இறங்கிவந்து பயிற்சி கொடுத்து உங்களையும் மேலே அழைத்துச்சென்று அந்த்ப்பக்கம் விடுவார்கள். அந்த வகையிலுள்ளவர்தான் பரமஹம்ஸ யோகானந்தர்" பின்னர் அவர் தன் ஆன்மீக அனுபவங்களைப்பற்றியும் கிரியாயோகத்தைப் பற்றியும் கூறினார்.

மேலும் அவர் கூறுகிறார்: "இந்த நூலினை வெளியிடவேண்டும் என்று என்னிடம் சொன்னார்கள். இதுவரையிலும் நான் ஏதாவது விழாவிற்குச் சென்று அங்கே ஒரு பத்தகத்தை வெளியிட்டிருக்கிறேனே தவிர புத்தக வெளியீட்டு விழா என்று சொல்லி, புத்தகத்தை நான் இதுவரையிலும் வெளியிட்டது கிடையாது. இதுதான் என் வாழ்க்கையின் முதல் புத்தகம். இது ஓர் ஆன்மீகப் புத்தகம். எனக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. ஒரு புத்தகத்தை எடுத்தேன் என்றால் அதில நல்ல விஷயங்கள் இருந்தால் அவற்றை பேனா வைத்து குறித்துக் கொள்வேன். இந்த புத்தகம் 10,15 நாட்களுக்கு முன்னர் என்னிடம் கொடுத்தார்கள். ஒரு பக்கத்தைப் பார்த்தேன். அதில் 4,5 கருத்துக்கள் இருந்தன, நல்ல கருத்துக்கள். இன்னொரு பக்கத்தில் பார்த்தேன். எல்லாமே நன்றாக இருந்தன. எல்லாமே குறித்துக் கொள்ளவேண்டியதாக இருந்தன. எனவே, நான் புத்தகத்தை அப்படியே வைத்துக்கொண்டேன். இதுபோன்ற ஓர் அருமையான புத்தகத்தை வெளியிடுவதற்கு எனக்கு பாக்கியத்தைக் கொடுத்து வாய்ப்பளித்த ஸ்வாமிஜிமார்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்னது போன்று இது சாதாரண விஷயம் இல்லை. அவ்வளாவு பெரிய வாய்ப்பு உங்களுக்கெல்லாம் கிடைத்திருக்கிறது. அதனுடைய பயணை நீங்கள் அனைவரும் அடைய வேண்டும். அந்த ஆண்டவன் மற்றும் குருமார்களுடைய அனுக்கிரகம் உங்கள் அனைவரின் மேலும் இருக்கவேண்டும். நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் நீங்கள் உங்கள் ஆத்மாவை உணர்ந்து அந்த பரமாத்மாவுடன் இணைய வேண்டும். தெய்வீகக் காதலைப்பற்றி ஸ்வாமிஜி மிகவும் அழகாகப் பேசினார். அந்தக் காதல் என்பது உங்களுக்கும் ஆண்டவனுக்கும் இடையே நடக்கிறது. நீங்கள் தியானம் செய்யும்பொழுது உங்களுக்கு சில காட்சிகள் வரும். அதை யாரிடமும் சொல்லவேண்டாம். அதை நீங்களே வைத்துக்கொண்டு நீங்களே அனுபவியுங்கள்! அது போகப்போக, தியானம் செய்யச் செய்ய அலுங்காமல், திகட்டாமல் அந்த ஆனந்தத்தை நீங்கள் அடைவீர்கள்! பாபாஜி மற்றும் குருமார்களுடைய ஆசீர்வாதம் உங்கள் அனைவரின் மேல் இருக்கட்டும்!" என்று கூறி அவர் தன் உரையை முடித்தார்.

நிச்சயமற்ற இந்த உலகத்தில் மனிதன் வாழ இறைவன் மற்றும் குருமார்களின் பாதுகாப்பு வேண்டும் என்பதை ஆன்மீகவாதியான திரு.ரஜினிகாந்த் அவர்கள் கூறிய வார்த்தைகளும் நம்மை மீண்டும் உணரச்செய்கிறது.

மீண்டும் மலரும்

குருப்ரியா
Cell No.9894595909



# யோகா

யோகா என்பது உங்களுக்கும் உங்கள் குருவிற்குமான நல்லுறவு. உங்களின் தனி திறனையும் ஈடுபாடையும் பொறுத்து குரு சிஷ்ய உறவின் வலிமை இருக்கும். இந்த உறவின் வலிமையைப் பொறுத்தே குருவால் ஒரு சிஷ்யனை ஆன்மீக உலகத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். ஏன் சொல்லப் போனால் அதையும் கடந்து குருவால் கூட்டிச் செல்ல முடியும்.

சதி தேவி தக்க மகாராஜனின் (தக்க்ஷ பிரஜாபதி) மகளாக பிறந்தவள். ஆதி சக்தியின் அவதாரம் இவள். சிவனையே தனது கணவனாக வேண்டி கடும் தவம் இருந்து, வரமும் பெற்றாள். ஆனால் சதி தேவியின் தக்கப்பன் ஆனா தக்கனுக்கு இதில் உடன்பாடு இல்லை. சதி சிவனை மணக்க, தக்கன் மகளை முற்றிலும் புறக்கணித்தார்.

இதன் பின், தக்கன் மிகப் பெரிய யாகம் ஒன்றை வளர்க்க தீர்மானித்து சிவன் சக்தி தவிர மற்ற எல்லா கடவுள்களைகளுக்கும் தேவர்களுக்கும் யாகத்திற்க்கு அழைப்பு கொடுத்தான். அழைப்பு இல்லை எனினும் தக்கப்பன் வீட்டு விழாவில் கலந்து கொள்ள சதி விருப்பம் கொண்டாள்.

சிவனோ நீ அங்கு செல்வது நல்லது அல்ல என்று அறிவுரை செய்தார். ஆயினும், தகப்பன் வீட்டிற்குச் செல்ல மகளுக்கு அழைப்பு தேவை இல்லை என்று பிடிவாதம் செய்ய, சிவன் தனது கணங்களின் துணையோடு சதி தேவியை அனுப்பி வைத்தார். சிஷ்யன் தனது ஆசையின் வழி செல்ல விருப்பப்படும் போது, பொதுவாக குரு வேண்டாம் என்று சொல்வது இல்லை. அவன் அனுபவம் வழியே அவனை கற்றுக் கொள்ள அனுமதித்து விடுகிறார்.

தகப்பன் இடத்தை அடைந்த பின்னரே தான் செய்தது தவறு என்று சதி உணர்ந்தாள். ஏன் என்றால், தக்கன் சிவனை அவதூறாக பேசியதோடு சதியையும் புறக் கணித்தான். சதி தனது தவறை உணர்ந்த தருவாயில், தன் குருவான சிவனை அவ மதித்து அவளால் ஏற்றுக் கொள்ள முடியாமல், அந்த யாகத்தில் தன்னை பலிக் கொடுத்தாள்.

கைலாசத்தில் சிவனின் கணங்கள், தக்கன் சிவனை அவமதித்து பேசியதைக் கூறியப் போது, அதை கேட்ட சிவன், அவர்களைப் பார்த்து புன்னகை மட்டும் செய்தார். சிவனின் கணங்களுக்கு குழப்பம். சிவனை அவமதித்தவனை ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்க, சிவன் அதற்கு விடை சொல்கிறார். “இந்த படைப்பின் இருக்கும் எல்லாம், இப்போது நடந்து கொண் டிருக்கும் யாகம் உட்பட என்னுள் அடக்கம். இருளும் நானே. வெளிச்சமும் நானே. தேவர் அசுரர் இரண்டும் நானே. இப்படி இருக்கையில் என்னை மதித்ததாகவோ, இல்லை அவமதித்தாகவோ ஒரு கேள்வி எப்படி எழ முடியும்? ஒரு வேலை என்னை ஒருவர் மதிக்கிறார் என்றாலோ இல்லை அவமதித்தார் என்றாலோ, அதற்கு அர்த்தம் எனக்கும் எல்லாம் அடக்கம் இல்லை. நானும் இந்த படைப்பில் ஒரு பாகமே தவிர, படைப்பு எனக்குள் அடக்கம் இல்லை என்று அர்த்தம் ஆகி விடும்.“

இது ஒரு சம்பவம் . பிறகு சிவனின் கணங்கள் வந்து, சதி தேவி அவமதிக்கப் பட்டதையும், அதனால் அவள் தன்னை யாகத்தில் பழிக் கொடுத்து விட்டால் என்று கூற, சிவன் யாகம் நடந்த இடத்திற்கு சென்று யாகத்தை அழித்தார்.

இரு சம்பவங்களையும் பார்க்க ஒன்றுக் கொன்று முரண்பாடாக இருக்கிறது. காரணம், சிவ தனது சிஷ்யைக்காக யாகத்தையே அழித் தார். சிஷ்யன் தனது குருவின் வழிகாட்டுதல் படி நடப்பின், அவன்/அவள் மீதான முழு பொறுப்பும் குருவினுடையது. ஒரு சிஷ்யயை அவமானப் படுத்துவதன் மூலம், தக்கன் குருவினுடைய சக்திக்கு சவால் விடுத்தான். சிவன் சக்தியும் இந்த படைப்பின் மிக சிறந்த குரு சிஷ்ய உறவிற்கான அடையாளம். கீதை சொல்கிறது, ஆதர்ஷ் புருஷ் (தலை சிறந்தவன் என்று பொருள்) என்று கருதப்படுபவனின் வழி சமூகத்தில் எல்லோரும் நடக்க வேண் டும். சிவன் எப்போதும் தலை சிறந்த தலை வன். ஒரு வேலை சிவன் இந்த நெறியில் இருந்து தவறி இருந்தால், படைபிற்கு என்ன முன்னுரிமை இருக்க முடியும்? இதே கட்டுப் பாடு சிஷ்யனுக்கும் இருக்கிறது. சிஷ்யன் குருவிற்கு எந்த அவப்பெயர் ஏற்படக் காரணமாக இருக்கக் கூடாது. சொல்லப் போனால் சதியம், அப்படி செய்து இருக்க கூடாது. எப்படியும் இருக்கட்டும், அது இப் போது முக்கியம் இல்லை. ஒரு சிஷ்யன் முழு நம்பிக்கையோடு குருவின் கை பிடித்து அவர் கூறும் வழி நடந்தால் மட்டுமே, அவன்/ அவள் மீதான பொறுப்பை ஏற்க ஒரு குரு முன் வருவார்.

யோகி அஷ்வினி

குரு சிஷ்ய பரம்பரை வழியாக யோகா நெறியை கற்றுக் கொள்ள அணுகவும். இந்தியாவில் பல பாகங்களில் தியான் அஷிரமத்தால் யோகா கற்றுக் கொடுக்கப்படுகிறது. எந்த கட்டணமும் கிடையாது. 9841430369.



யோகி அஷ்வினி

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
what-up no: 7299992699
aanmeegamalar@gmail.com



யோகி அஷ்வினி
சென்னை விஜயம்

யோகி அஷ்வினி சென்னைக்கு வருகைதரவுள்ளார், யோகா கலையைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் அவரைச் சந்திக்கவிரும்பினால் தொடர்பு கொள்ளவும்.
**9841430369**

# காத்யாயினி தேவி
## கர்ப்ப ரக்ஷாம்பிகையாக
## மாற்றிய கண்ணனின் லீலை

அஸ்வத்தாமன் கௌரவர்களின் குருவான துரோணாச்சார்யரின் மகன். பிறப்பால் அந்தணன். தந்தையைப்போல அஸ்திர சாஸ்திரத்தில் திறமை மிக்கவன். மந்திர தந்திர சாஸ்திரங்களில் தந்தை யையும் மிஞ்சியவன். தன் தந்தை துரோணரைக் கொன்ற காரணத்தால், அவன் பாண்டவர்களைப் பழிவாங்கத் துடித்துக்கொண்டிருந்தான்.

ஆத்திரம் கண்ணை மறைக்கும் என்ற முன்னோர்களின் வாக்குப்படி, பாண்டவர்களுக்குத் துரியோதனன் இழைத்த தீங்கையும் அநீதியையும் நன்கு உணர்ந்தவன்தான் அவன். ஆனாலும், செஞ் சோற்றுக்கடன் கழிக்க வேண்டியும், கௌரவர்களை பழிதீர்க்க வேண்டிய வெறியும், துரியோதனனுக்கு ஆதரவாக அதர்மத்தின் பக்கம் நின்றான்.

பாரதப் போர் நீண்ட நாட்களாக நடைபெற்று கடைசி கட்டத்தை எட்டியிருந்த போது துரியோதனும் கொல்லப்பட்டான், அவன் மரணத்தை தழுவுவதற்கு சிலவிநாடிகளுக்கு முன் அஸ்வத்தாமன் துரியோதனனை சந்தித்தான். செஞ்சோற்றுக் கடனுக்காக, தான் என்ன செய்ய வேண்டும் என்று துரியோதனனிடம் கேட்டான் அஸ்வத்தாமன்.

‘எப்படியாவது பாண்டவர்களைப் பழி வாங்க வேண்டும்’ என்று அஸ்வத்தாமனிடம் முறையிட்டான் துரியோதனன். மரணத்தின் வாயிலில் நின்றுகொண்டு, நன்றிக்கடனாக தன்னிடம் வேண்டிக்கொள்ளும் கௌரவச் சக்கரவர்த்தியின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதைத் தன் முக்கிய கடமையெனக் கருதினான் அஸ்வத்தாமன். ஏற்கெனவே, தன் தந்தையின் மரணத்துக்காகப் பாண்டவர்கள் மேல் வெறுப்புற்றிருந்தவனுக்கு, இப்போது அதற்கும் சேர்த்து பழிவாங்கும் எண்ணம் மேலோங்கியது. துரியோதனன் விரும்பிய வண்ணமே செய்வதாக வாக்களித்துவிட்டுப் புறப்பட்டான்.

எந்தவித ஆயுதப்படையும் இல்லை, தன்னந்தனியாக இருந்த அஸ்வத்தாமன் எப்படி கௌரவர்களை பழி தீர்ப்பது என்று ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தான். அவன் யோசனை பலமணித்துளிகளை கடந்து நடு இரவு நேரமானது. அவன் அமர்ந்திருந்த மரத்தின் மீது காக்கைகள் தனது கூட்டில் உறங்கிக் கொண்டிருந்தன.

அப்போது, ஒரு கோட்டான் அங்கே வந்து, உறங்கிக்கொண்டிருந்த காக்கைகளைக் கொத்தித் தின்றது. இரவில் கண் தெரியாமல், எதிரி யாரென்றும் அறியாமல், எதிர்க்கவும் முடியாமல், காக்கைகள் உயிர் விட்டன. அந்தக் கோட்டான், காக்கைகளைக் கொன்றது போல



உறங்கிக்கொண்டிருக்கும் பாண்டவர்களையும், பாண்டவ புத்திரர்களையும் கொன்று, பாண்டவ வம்சத்தையே இரவோடு இரவாகப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டான் அஸ்வத்தாமன்.

பாண்டவர்களின் பாசறைக்குச் சென்று, உறங்கிக் கொண்டிருந்த பாண்டவர்களின் புத்திரர்களை ஒவ்வொருவராக வெட்டிச் சாய்த்தான். பாண்டவர்கள் மட்டும் அந்த நேரம் அங்கில்லாமல் போகவே, அவர்கள் உயிர் தப்பினார்கள். பொழுது புலரும் நேரத்தில் பாசறைக்குத் திரும்பிய பாண்டவர்கள், தங்கள் புத்திரர்கள் அனைவரும் கோரமாக மடிந்து கிடப்பதைக் கண்டனர்.

இது அஸ்வத்தாமன் வேலை என்றறிந்த ஐவரும் கொதித்து எழுந்தனர். வனத்தில் ஓடி, மறைந்திருந்த அஸ்வத்தாமனை தேடிச் சென்றனர். போருக்கு அறைகூவினர். நேருக்கு நேர் போர் செய்ய இயலாத அஸ்வத்தாமன், ஒரு தர்ப்பையை மந்திரித்து, அதனையே அஸ்திரமாக்கி, பாண்டவர்களின் சந்ததி அனைத்தையும் அழிக்கும்படி ஆணையிட்டு அதை ஏவினான். மந்திர தந்திர வித்தையில் மிகக் கை தேர்ந்த அஸ்வத்தாமனின் மந்திர தர்ப்பையும் விடாத கருப்பைப் போல... காலசர்ப்பம் போல விஷத்தைக் கக்கிக்கொண்டு புறப்பட்டது அந்த தர்ப்பை அஸ்திரம்.

பாண்டவர்கள் அதை எதிர்த்து அஸ்திரங்களைத் தொடுத்தனர். ஆனால், அந்த தர்பாஸ்திரம் தங்களைத் தாக்காமல் காத்துக்கொள்ள முடிந்ததே தவிர, அவர்களால் அந்தத் தர்ப்பையை அழிக்க முடியவில்லை. ஆதிபராசக்தியின் அழிக்கும் சக்தியை ஆதார மந்திரமாக்கி, தர்ப்பையை மந்திரித்து ஏவியிருந்தான் அஸ்வத்தாமன். அது சீறிச் சென்ற இடத்தில் நின்றிருந்த பாண்டவ சந்ததியினர் அனைவரும் மடிந்து வீழ்த்தியது.. முடிவாக மீதி இருந்தது ஒரே ஒரு பாண்டவ சந்ததிதான். அர்ஜுனனின் புதல்வன் அபிமன்யுவின் மனைவி உத்தரை.

உத்தரை, விராட மன்னனின் புதல்வி. அபிமன்யுவின் மனைவி. அம்பிகையிடம் தீவிர பக்தி கொண்டவள். அபிமன்யுவின் திருமணத்தன்றே அவளுக்கு காத்யாயினி என்கிற துர்கையை உபாஸிக்கும் மந்திரத்தை உபதேசித்திருந்தான் கண்ணன். அவளும் தீவிரமாக தேவி உபாஸனை செய்து வந்தாள். தன் மங்கலச் சின்னங்கள் நீடித்திருக்க, அவள் அன்னை ஆதிபராசக்தியை தினமும் ஆராதித்தாள். ஆனால், விதியின் கோலத்தால், திருமணமாகி ஒருவருடத்தில் கணவன் அபிமன்யு யுத்தகளத்தில் பலியாகிவிட்டான். கணவனை பிரிந்த துக்கம் தாங்காமல் உத்தரை தற்கொலைக்கும் முயன்றாள். ஆனால், அப்போது அவள் கர்ப்பவதியாக இருந்ததாலும், கண்ணனின் அறிவுரையாலும் மனம் மாறினால், கண்ணன் அவளது தற்கொலை என்னத்தை மாற்றியிருந்தான்.

‘அன்னை ஆதிபராசக்தியை ஆராதித்து என்ன பயன்? உத்தரையின் மாங்கல்யத்துக்கே பங்கம் வந்துவிட்டதே?’ என்று மற்றவர்கள் கூறினார்கள். உத்தரை மனம் தளரவில்லை. தீவிர வைராக்கியத்துடனும் பக்தியுடனும் அன்னையைத் தொடர்ந்து ஆராதித்தாள். அதற்குப் பலன் கிடைக்கும் நேரம் வந்தது. கண்ணனின் ஆணைப்படி கர்ப்பரக்ஷா மந்திரத்தை ஜபித்து காத்யாயினியை பக்தியோடு பூஜித்து வந்தாள் உத்தரை.

அஸ்வத்தாமன் அனுப்பிய தர்பாஸ்திரத்தைக் கண்ணனே ஓர் ஆயுதத்தால் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். ஆனால் ‘பாரதப் போரில்


www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

ஆயுதம் எடுக்கமாட்டேன்' என்று கண்ணன் இரு தரப்பினருக்கும் வாக்களித்திருந்தான். அவன் வாக்குத் தவற விரும்பவில்லை. அதேநேரம், அவன் தர்மம் தவறவும் தயாராக இல்லை. உத்தரையின் கர்ப்பத்தில் வாழும் பாண்டவர்களின் சந்ததிக்கான சிசுவைக் காப்பாற்ற சங்கல்பித்தான் கண்ணன். உத்தரை அன்றாடம் உபாஸிக்கும் அன்னை காத்யாயினி வேறு யார்? அவள் கண்ணனின் சகோதரிதானே! தன் சகோதரி காத்யாயினிடமே அந்தப் பணியைத் தந்தான் கண்ணன்.

இதற்காகவே அவன் உத்தரைக்கு காத்யாயினியை உபாஸனை செய்யும்படி ஏற்கெனவே உபதேசித் திருந்தான்.

அஸ்வத்தாமன் அனுப்பிய அஸ்திரம் உத்தரையின் உடலை நெருங்கிய அதே விநாடி, அவள் கர்ப்பத்தில் இருந்த சிசுவை அங்கிருந்து அகற்றி, கண்ணன் திருக்கரத்தில் வைத்துவிட்டு, அந்த இடத்தில்தானே அமர்ந்துகொண்டாள் தேவி காத்யாயினி.

அஸ்வத்தாமனின் மந்திர தர்ப்பை, ஆதிபராசக்தியைத் தாக்கியதுமே அது சக்தியிழந்து பஸ்பமானது. அந்த விநாடியே தான் இருந்த இடத்தில் மீண்டும் உத்தரையின் சிசுவை கண்ணனிடமிருந்து வாங்கி வைத்துவிட்டு, வெளியில் வந்தாள் காத்யாயினி.



மாயவன் கண்ணன், மாயை எனும் அவன் சகோதரி துர்கை இருவரும் அனுக்ரஹித்து, பாண்டவ வம்சத்தைக் காத்து, உத்தரையின் கர்ப்பத்தில் உயிர்காத்துத் தந்த அந்த சிசு தான், பரீக்ஷித்து மஹாராஜன். கர்ப்பமான உத்திரையை காத்த, காத்யாயினி அன்று முதல் உலகில் உள்ள அனைத்து பெண்களின் கர்ப்பத்தையும் காக்கும் தெய்வமாக மாறினாள். கண்ணனின் கட்டளையை ஏற்று கர்ப்பத்தை காத்ததால் காத்யாயினி தேவி கர்ப்ப ரக்ஷாம்பிகையானால் இதன் காரணத்தால் இன்றும் பெண்கள் கர்ப்பத்திலுள்ள சிசுவைக் காத்து, நல்ல சந்தானம் பெறுவதற்கு அம்பிகையை உபாஸிக்கிறார்கள்.

அதுநாள் வரை காத்யாயினி என்ற திருநாமத்தில் இருந்த அம்பிகைக்கு 'கர்ப்ப ரக்ஷாம்பிகை' அதாவது 'கர்ப்பத்தில் உள்ள சிசுவைக் காப்பவள்' என்ற பெயர் உண்டு.

தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில், திருக்கருகாவூர் எனும் புண்ணிய ஸ்தலத்தில், ஸ்ரீமுல்லைவனநாதர் ஆலயம் உள்ளது. இங்கே உள்ள அம்பிகையின் திருநாமம் கர்ப்ப ரக்ஷாம்பிகை. இந்த ஸ்தலத்தை தரிசித்து, கர்ப்ப ரக்ஷாம்பிகையை வழிபட்டால் சுகப்பிரசவம் நிகழும் என்பது நம்பிக்கை.

'காத்யாயனாய வித்மஹே
கன்யகுமாரி தீமஹி
தந்நோ துர்க்கா பிரச்சோதயாத்'

என்ற துர்கா காயத்ரியைப் பெண்கள் பக்தியோடு ஜபித்து வந்தால், கர்ப்பத்தில் உள்ள சிசு காப்பாற்றப்பட்டு, ஆரோக்கியமான குழந்தை பிறக்க வழி உண்டு என்கின்றன சாஸ்திரங்கள்.

கர்ப்ப ரக்ஷாம்பிகை ஸ்லோகம்:

ஹிமவத்யுத்தரே பார்ஸ்வே சுரதா நாம யக்ஷிணி
தஸ்யா ஸ்மரண மாத்ரேணா விசல்யா கர்பிணிபவேது
ஹே சங்கர ஸ்மரஹப் பிரமதாதி நாதரி மன்னாத சாம்பசசிரூட
ஹரதிரிசூலின் சம்போக சுக பிரசவ கிருதபவமே
தயாளோ ஹேமாதவி வநேஸ பாலயமாம் நமஸ்தே!

என்ற இந்த மந்திரத்தை கர்ப்பவதிகள் தொடர்ந்து தங்களால் இயன்ற அளவு நாள்தோறும் கூறி அம்மனை பூஜித்தால், அனைத்துவித எதிர்மறை சக்திகள் அழிந்து, கர்ப்பத்தில் வளரும் சிசு உடலாலும், உள்ளத்தாலும் மிகுந்த சக்தியுள்ள சிசுவாகவும், அதித சக்தி வாய்ந்த சிசுவாகவும் வளரும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

– மாலதிகண்ணன்,
திருமயம்.





# பிரம்மாண்டம் எளிமைக்கே வசப்படும்



ஆன்மீகத்தின் தேடலில் ஈடுபட்டிருக்கும் வெகு பலரில் ஒரு சிலர் ஏனோ ஆன்மீகத்தினை பிரம்மாண்ட சூழலில்தான் அடைய முடியுமென கருதுகின்றனர்.

பிரம்மாண்டத்திற்கு நாமும் கைப்பிள்ளையாக இருந்தால் மட்டுமே அதனை அடைய முடியுமென்ற தவறான கருத்திற்கு நன்றாக நீரூற்றி வேர் ஊன்ற செய்து வருகின்றனர்.

மலையென பிரம்மாண்டமாய் காணப்படும் ஆன்மீகத்திற்கு ஒவ்வொரு சிறு துகள்கள்தான் அதன் அடிப்படை .ஒரு மலைக்கு மற்றொரு மலை அடிப்படையல்ல என்பதை நாம் நன்கு அறிவோம்.

எளிமை எனும் துகள்களின் கூட்டே ஆன்மிக மெனும் மலையின் உருவாக்கம்.மலைகளின் கூட்டு அல்ல மலை.

எளிமைக்குள் தேடப்பட முடியாதவை பிரம்மாண்டத்திற்குள் இருக்கலாம் என்ற எண்ணம் வரலாம். ஆனால் அது சாத்தியமில்லை.

பிரம்மாண்டம் எளிமைக்கே வசப்படும். மலையருவி தரை நோக்கி வருவதைப் போல; ஆன்மீகம் எனும் மலை துகள்களாய் மாறவே விரும்புகிறது. மலையாய் அல்ல.

துகள்களே தங்களை மலையாய் எண்ணுவதும், அந்த துகள்களை துணையாக கொண்டு பிரம்மாண்டத்தை அடைய முற்படும் சிறு துகள்களும் அடையப் போவது எதை?

துகள்கள் துகள்களாகவே எளிமையோடு இருந்தால் மலையென ஏற்றம்பெறலாம். ஆனால் மலையாகவே தனித்துகள்கள் தம்மை ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தால் துகளுக்கான மதிப்பையும் பெற முடியாது போகும்.

ஆன்மிகத்தை தேடுபவர்கள் இதை உணர்வார்களா?

Thali
Ph: 96009 99279






# கடவுள் படைத்த உலகில் தீமைகள் உருவானது ஏன்?

இன்றைய செய்தித்தாள்களை படிக்கும் போது இக்கேள்வி நம் அனைவரின் மனத்திலும் எழுவது இயல்பே. விக்கிபீடியாவின் தகவலின் படி 2015 லிருந்து 2016 வரையில் 300ற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாத தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

அதாவது ஒருநாளைக்கு குறைந்தது ஒன்று என்கிற ரீதியில்! உலகம் முழுவதும் மனித இனத்திற்கு கேடு விளைவிக்கும் ஏனைய எண்ணற்ற குற்றங்கள், பயங்கரவாத தாக்குதல்கள் ஆகியவை இக்கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றாலும் அவையும் மக்களினத்திற்கு கேடு விளைவிப்பனவே.

2015ஆம் வருடம் நவம்பர் 23 ல் நடந்த பாரிஸ் தாக்குதல், உண்மையில், உலகமே ஏதோ தவறான பாதையை நோக்கி சென்று கொண்டிருப்பதை தெள்ளத்தெளிவாக காண்பிப்பதோடு மட்டுமல்லாமல், நம் அனைவருக்குமே தெருவில் நிகழக் கூடிய அபாயங்கள் அதிகரித்துள்ளன என்பதையும் காண்பிக்கின்றது. அதோடு கூட, எவ்வித எச்சரிக்கையும் இல்லாமலே இத்தகைய ஆபத்துக்கள் நிகழக்கூடும் என்பதும் உண்மை. மற்றொரு நாட்டில் பெண்களும் குழந்தைகளும் அந்த குறிப்பிட்ட மதத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்பதால் கண்மூடித்தனமாக கொலை செய்யப்படுகிறார்கள். வேறொரு பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடு, தன் சொந்த நாட்டின் அரசியல் ஆதாயத்திற்காக உலகில் குறிப்பிட்ட பகுதிகளில் ஸ்திரமின்மையை ஏற்படுத்த தீவிரவாதிகளுக்கு நிதி மற்றும் ஆயுதம் வழங்குகிறது. ஆம், உண்மையில் இவற்றையெல்லாம் பார்க்கும்போது இவ்வுலகமே பைத்தியகாரத்தனமாக ஆகிவிட்டதை போன்று தோன்றும். சமீபத்தில் கேன்டர்பரியின் பேராயர் BBCயில், பாரிஸின் பயங்கரவாத தாக்குதல், கடவுள் உள்ளாரா என்கிற சந்தேகத்தை தனக்கு ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார். நம்பிக்கை மிகுந்த ஒரு மத தலைவருக்கே இப்படி தோன்றினால், இதில், மதம் மற்றும் கடவுளின் மீது நம்பிக்கை வைத்திட போராடும் மற்ற சாதாரண மனிதனின் நிலை என்னவாக இருக்கும்.

மூன்றாம் உலகப் போர் கடவுள் ஏன் கெட்ட விஷயங்களை நடக்க அனுமதிக்கிறார்?

மேற்குறிப்பிட்டபடி சமீப காலமாக, கூகுளில், பயங்கரவாதம் குறித்த ஏற்றங்களுடன் கூடச்சேர்த்து மூன்றாம் உலகப்போர் குறித்தும் சர்ச்சை நடைபெறுகிறது.

இது, உலகில் பல மக்களுக்கு பயங்கரவாதம் குறித்து ஏற்படுத்தியிருக்கும் அச்சத்தை உணர்த்துகிறது. தவிர அவர்களின் பாதுகாப்பு பற்றியும் அஞ்சுகின்றனர் என்பதன் அறிகுறியாகும்.



தங்களுடைய நம்பிக்கைகளின் மீது தடுமாற்றம் ஏற்பட்டு “கடவுள் ஏன் கெட்ட விஷயங்களை உலகில் நடைபெற அனுமதிக்கிறார்? ஏன் நல்லவர்களுக்கு கெட்ட விஷயங்கள் நடக்கின்றன” என்று கேட்கின்றனர்.

உலகம் முழுக்க நடைபெறும் இந்த பைத்தியக் காரத்தனத்திற்கு முடிவுதான் என்ன? SSRF (ஆன்மீக வலைத்தளம்) இவற்றை பற்றி, ஒரு தனி நபரின் விதி குறித்த கருத்து, பிறந்தவருடைய விதியின் காரணமாக அந்நபருக்கு ஏற்படும் சந்தோஷம் மற்றும் துக்கம், தற்போதைய காலகட்டத்தில் பிறந்திருப்பவருடைய சூழ்நிலை மற்றும் அவர்தம் வாழ்க்கையில் அவரது கட்டுப்பாடின்றி நடைபெறும் நிகழ்வுகளின் காரணமாக ஏற்படும் சந்தோஷம் மற்றும் துக்கம் ஆகியவற்றின் விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. தற்போதைய கலியுகத்தில், ஒரு மனிதனின் தனிப்பட்ட விதி அவனுடைய வாழ்க்கையின் மீது 65% தாக்கம் ஏற்பட காரணமாகிறது. மீதம் 35% அவனது தனிப்பட்ட மன விருப்பத்தின் காரணமாகச் செய்யும் செயல்களின் தாக்கத்தினால் ஏற்படுகிறது.

எனினும் நம் வாழ்க்கையில் அவரவர் தனிப்பட்ட விதியுடன் இந்த பூமியின் விதியும் சேர்ந்து கூட்டாக அதன் தாக்கத்தை ஏற்படுத்தும். 1999ல் உலகம் அதன் வரலாற்றின் இருண்ட கட்டத்தை எட்டியுள்ளது. 2016 லிருந்து 2023 வரை உள்ள காலம் இன்னும் கடுமையானதாக இருக்கும். அதி தீவிரமான இயற்கை பேரழிவுகளுடன் சேர்த்து கொடூரமான மூன்றாம் உலக போரை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

ஆகையால், நாம் இத்தகைய கீழ் நிலைக்கு தள்ளப்பட்டது எதனால் என்பதை பற்றி தெரிந்து கொள்வோம்.

சமூகத்தில் ஆன்மீக தூய்மையின்மை அதிகரிக்கும்போது மனித வரலாற்றின் சுழற்சியானது பெரும் பள்ளத்தை நோக்கி நழுவுகின்றது. நாம் அனைவருமே குறைந்தளவோ அல்லது அதி களவிலோ இந்த ஆன்மீக தூய்மையின்மை ஏற்பட காரணமாகிறோம். நம்முடைய ஆளுமை குறை பாடுகள், ஈகோ (அகங்காரம்) மற்றும் பிரபஞ்ச கோட்பாடுகள் உள்ளடங்கிய முழுமையான ஆன்மீக பயிற்சி இல்லாதது, இவை அனைத்துமே, இந்த ஆன்மீக தூய்மையின்மைக்கு காரணம். அதுமட்டுமல்லாமல், இவை அனைத்துமே கூட்டாக சேர்ந்து இவ்வுலகினில் ஏற்படும் தூய்மையற்ற எண்ணங்கள் மற்றும் செயல்கள் போன்றவற்றிற்கும் அல்லது செயலற்று இருத்தல் போன்றவற்றிற்கும் அதிக விகிதத்தில் காரணமாகின்றன. மேலும், இத்தகைய பள்ளத்தை நோக்கி இவ்வுலகம் நகரும்போது தீய சக்திகள் அதனை அவற்றிற்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன.

தீய சக்திகளானது மனிதனின் ஆளுமை குறைபாடுகளை பயன்படுத்திக்கொண்டு அவனை கீழ்த்தரமானவனாக மாற்றி சக மனிதனுக்கு எதிராக கொடூரமான குற்றங்களை செய்ய முற்படுகிறது. இவ்வனைத்துக் காரணங்களால் காலச் சக்கரத்தின் சுழற்சியானது ஓர் இருண்ட, கோரமான கட்டத்திற்குள் நுழைகையில் அனைத்து நாடுகளும் பாதகமானதொரு கூட்டு விதியை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டியிருக்கும். இவற்றில் சில நாடுகள் அதிகளவிலும் சில குறைந்தளவிலும் பாதிக்கப்படுகின்றன.

ஆக மொத்தத்தில் உலகில் இத்தகைய பாதிப்பு ஏற்படாத ஒரு நாடு கூட இருக்காது என்பதை குறிப்பிட தேவையில்லை. உலக வரலாற்றின் இந்த இருண்ட காலகட்டத்தில், இவ்வகை கூட்டு விதியால் ஏற்படும் சம்பவங்கள் மக்களின் வாழ்வில் அவரவர்களின் தனிப்பட்ட விதியைக் காட்டிலும் அதன் ஆதிக்கத்தை வெகுவாக செலுத்த தொடங்கியுள்ளது.

சொல்லப்போனால், 2018 2023 ஆம் வருடம் வரையில் அதன் தாக்கம் மிக தீவிரமாக இருக்கும். தவிர அது மனித உயிர்க்கு பெரும் இழப்பு அளிக்க கூடியதாகவும், மாபெரும் சேதத்திற்கு காரணமாக அமைகின்ற ஒரு பெரிய அழிவு செயலாகவும் இருக்கும்.


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 மே 2017 27
www.aanmeegamalar.com

ஒரு மனிதனின் தனிப்பட்ட விதி மற்றும் இந்த பூமியின் கூட்டு விதி, இவ்விரண்டின் கலவையும் சேர்ந்த இத்தகைய சூழல்தான், உலக மக்கள் பலர் அநியாயமாக கொல்லப்படுவதற்கும், துன்புறுத்தப்படுவதற்கும் காரணம். இந்த பாதகமான விதியை ஒரு பயங்கர சுமை போன்று நாம் தாங்க வேண்டி உள்ளது. எனினும் இது, நம் தற்போதைய வாழ்நாட்களில் அல்லது முந்தைய ஜென்ம வாழ்க்கைகளில் நாம் செய்த நம் சொந்த செயல்கள் மற்றும் தவறான நடவடிக்கைகளின் பலன் தான் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். இப் பிரபஞ்சத்தின் சட்டப்படி நாம் அனைவரும் நம் விதியை மேற்கொள்ள வேண்டியது கட்டாயம். இதிலிருந்து தப்ப முடியாது. நம் தனிப்பட்ட விதியோ அல்லது இவ்வுலகின் கூட்டு விதியோ எதுவாய் இருந்தபோதிலும் கடவுள் நம் விதியை நாம் அனுபவிப்பதற்கு இடையே வருவதில்லை. நம் மனித இனம் கூட்டுவிதியின் கருவியாக செயல்பட்டு, அருமை பூமித்தாய்க்கு பாரமாக இருந்து கெட்ட விஷயங்களை அரங்கேற்றுகிறது. இதற்கெல்லாம் தீர்வு கிடைக்கும் ஒரே இருப்பிடமான கடவுளின் இருப்பை யாரால் மறுக்க இயலும்?

## இதன் தீர்வுதான் என்ன?

தற்போதைய வாழ்க்கையில் நம் சொந்த விருப் பதினால் நம் ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங் காரம் குறைய முயற்சிகள் மேற்கொண்டு ஆன்மீக வளர்ச்சியை அதிகரிப்பதினால் நம் தனிப்பட்ட விதியின் பாதகமான விளைவை ஏதுமல்லாது செய் திட முடியும். நாம், நம்முடைய ஆன்மீக பயிற்சியின் மூலம் நமக்குள் இருக்கும் தெய்வீக தன்மையை வெளியே கொண்டு வர இறைவனை நோக்கி உண்மையாக ஒரு அடி எடுத்து வைத்தால், அவர் 10 அல்ல, 100 அடிகள் முன்னேறி நமக்காக உதவி செய்கிறார். ஆன்மீக பயிற்சி என்றால் அது சில தொலைநோக்கற்ற குறுங்குழுவின் நிலைப்பாடுகளை கொண்டதாக அல்லாமல் இப்பிரபஞ்சத்தின் ஆன்மீக கோட்பாடுகளுக்கிணங்க இருக்க வேண்டும்.

தன் ஆன்மீக வளர்ச்சிப் பற்றிய உறுதியுடன் நேர்மையாக எந்த ஒரு பக்தன் முன்னேறுகிறானோ அவனை பாதுகாக்க கடவுள் மலைகளையும் நகர்த் துகிறார். கடவுளின் கருணையினால் ஒரு சாதகர்/பக்தர் தன் தனிப்பட்ட அல்லது கூட்டு விதியின் காரணமாக அவர் எதிர்கொள்ளும் உடல் சார்ந்த, மனம் மற்றும் ஆன்மீக நிலை சார்ந்த தடைகளை கடக்க அல்லது குறைந்தபட்சம் அதை தாங்கி கொள்ளக்கூடிய வலிமையை பெறுகிறார். இதுவே சரியான ஆன்மீக பயிற்சி மேற்கொள்வதின் முக்கியத்துவத்தை உணர்த்தும். யாருக்கு இவ்வுலகில் அடுத்த பத்தாண்டுகள் கடந்து வாழக் கூடிய அதிர்ஷ்டம் உள்ளதோ அவர்களுக்கு, நம் மனிதகுலம் அதன் தவறுகளில் இருந்து கற்று தெளிந்து ஒரு புதிய அமைதி நிலவுகின்ற மற்றும் ஆன்மீக விழிப்புர்ணர்வு ஏற்படுகின்ற காலகட்டத்தை நோக்கி நுழைவதை காண ஒரு இனிமையான ஆச்சரியமாக இருக்கும். 2023 ஆம் ஆண்டிலிருந்து இந்த பூமியினுடைய கூட்டு விதியின் நல்ல காலகட்டத்தின் சுழற்சி ஆரம்பம் ஆகிவிடும்.

மேலும் விவரங்களுக்கு:
www.spiritualresearchfoundation.org
தொடர்பு கொள்ள : 9380949626

மனித வாழ்க்கை



மனித வாழ்க்கை
அதிசயமானது தான்!!! ஆச்சரியமானது தான்......!!!
அபூர்வமானது தான்......!!! அர்த்தமுள்ளது தான்.....!!!
உத்தமமானது தான்.....!!!
அதனால்.....
இன்றிலிருந்து...... இப்பொழுதிலிருந்து.....
உன் வாழ்க்கையை மட்டும் நீ வாழ்ந்து பார்......!!!
வாழ்வின் ரசனை தெரியும்.......!!! அர்த்தமும் புரியும்........!!!
இனியும் உன் வாழ்க்கையைக் கேவலப் படுத்தாதே......!!!
உன் வாழ்க்கையை அசிங்கப் படுத்தாதே.....!!!*
உன் வாழ்க்கையை உதாசீனப் படுத்தாதே.....!!!*
உன் வாழ்க்கையை வெறுக்காதே.......!!!





# வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி, குருபிரியா Cell 9894595909
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# தாய்விடும் கண்ணீரால் ஏற்படும் பாவம்

## லட்சம் பசுக்களை தானம் செய்தாலும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட அஸ்வமேத யாகங்கள் செய்தாலும் அந்தப் பாபம் போகாது

உலகில் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், வாழ்க்கையில் எவற்றையெல்லாம் கடைபிடிக்க வேண்டும். எவற்றின் பக்கம் மனித மனம் செல்லக்கூடாது என்று நமது இந்து மதத்தில் பல்வேறு புராணக்கதைகள், வேத மந்திரங்கள், உபதேசங்கள் போன்றவற்றின் மூலம் நமது முன்னோர் வகுத்துள்ளனர்.

அந்த வகையில் விநாயகருக்கும் முருகப்பெருமானுக்கும் ஒரு மாம்பழத்தால் நடைபெற்ற லீலைகள் தற்போதைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமானதாகவே இருக்கிறது.

உலகையே ஆளும் முருகப்பெருமானுக்கே, தாய் தந்தையைவிட மிகப்பெரியதொன்றும் உலகில் இல்லை என்பதை விநாயகரின் மூலம் உலகுக்கு உணர்த்திய சிவபெருமானின் லீலைகள், தற்போதைய காலத்தில் தாய் தந்தையரை உதாசீனம் செய்யும், அற்ப மனித பிறவிகள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

புத்தகப்படிப்பை மட்டும் நமது குழந்தைகளுக்கு அளிப்பதால் பயன் ஒன்றும் இல்லை, இந்து மதத்தில் உள்ள இதுபோன்ற புராணக் கதைகளையும் நமது குழந்தைகளுக்கு சொல்லித்தர வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும்.

வெறும் புத்தக கல்வியை மட்டும் சொல்லித்தருவதால், இன்றைய தலைமுறையினர் காசு, பணம், வசதி, வாய்ப்பு போன்றவற்றிற்காக தாய்–தந்தையரின் மனதை வருத்தும் அவல நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாறவேண்டுமானால் அவசியம் நமது குழந்தைகளுக்கு இந்து புராணக் கதைகளை அவசியம் சொல்லித்தரவேண்டும்.

அந்தவகையில் தாய் தந்தையை வணங்குவதால் ஏற்படும் நன்மைகளை நமது சம்பிரதாயம் பல்வேறு வகையில் சொல்லியுள்ளதை பார்ப்போம்.

தாய் தந்தையை வணங்குவதால் ஏற்படும் நன்மைகள்

இந்த பூமியை விட பாரமானவள் தாய்

ஆகாசத்தை விட உயர்ந்தவர் தந்தை

ஒரு முறை தாய் தந்தையர்க்கு நமஸ்கரித்தால் பசுவை தானம் செய்த பலன் கிட்டும்.

ஸத்யம்_தாய், ஞானம்_தந்தை.

பத்து உபாத்யாயர்களை விட ஆசார்யர் சிறந்தவர்.

நூறு ஆசார்யர்களை விட தந்தை சிறந்தவர்.

தந்தையை விட ஆயிரம் மடங்கு சிறந்தவள் ஜென்மாவை கொடுத்த தாய்.

அவர்களுக்கு சேவை செய்தால் 6 முறை பூமண்டலத்தை ப்ரதக்ஷிணம் செய்த பலனும், 1000 முறை காசி யாத்திரை செய்த பலனும், 100 முறை ஸமுத்திர ஸ்நானம் செய்த பலனும் கிட்டும்.

எந்த மகன், மகள் மாத்ரு தேவதையை சந்தோஷமாக வைத்திருக்க மாட்டார்களோ, சேவை செய்ய மாட்டார்களோ அவர்களின் சரீர மாமிசம் நாய் மாமிசத்தை விட ஹீனமானது என்று வேதம் கூறுகிறது.

எப்பேற்பட்ட சாபத்திற்கும் விமோசனம் உண்டு, பெற்ற தாய் கண்களிலிருந்து கண்ணீரை வரவழைத்தால் அதற்கு ஒரு லட்சம் பசுக்களை தானம் செய்தாலும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட அஸ்வமேத யாகங்கள் செய்தாலும் அந்தப் பாபம் போகாது. என்று வேதங்கள் தெளிவாக கூறியுள்ளது.

தாயை விட சிறந்த தெய்வம் இல்லை,

காயத்ரியை மிஞ்சிய மந்திரம் இல்லை..



ஆன்மிகமலர்
மெயில் புக்

விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com

# பயம் பிணி கவலைகளை போக்கும் காத்தாயி அம்மன்



காத்தாயி அம்மனுக்கு ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வோர் அடைமொழி இருக்கும். உதாரணமாக, சில இடங்களில் நல்ல காத்தாயி என்றும், சில இடங்களில் சித்தாடி காத்தாயி என்றும் அழைக்கின்றனர். காத்யாயன மகரிஷிக்கு பிறந்தவளே காத்யாயினி. ஏழு முனிகளும், முருகன் துணைவி யான வள்ளியை வளர்த்த நம்பிராஜனின் பிள்ளைகள். அம்பிகையின் பணியே உயிர்களைத் தம் குழந்தைபோல் காப்பது. காத்த+ஆயி அவளே காத்தாயி என தமிழறிஞர்கள் சொல்கின்றனர். 'காத்தாய்+நீ' என்பதும் காத்யாயினி என மருவியிருக்கலாம் என்பது அவர்களின் கணிப்பு. அனைத்து உயிர்களையும் தன் குழந்தை யைப்போல் காத்து வரும் காத்யாயினி அம்மனை வழிபடுவோர் பயம், பிணி, கவலை ஆகியவற்றிலிருந்து காக்கப்படுவார்கள் என்பது உண்மை

## நான்கு வகை உயிரினங்கள்

1. சுவேதஜம் புழுக்கத்திலிருந்து பிறக்கக்கூடியன புழு, பூச்சி, கொசு போன்றவை.
2. உத்பிஜம் பூமியைப் பிளந்து கொண்டு வெளிவருவன மரம், செடி, கொடி போன்றவை.
3. அண்டஜம் முட்டையிலிருந்து வெளிவருவன பறவைகள், சில நீர்வாழ்வன போன்றவை.
4. ஜராயுதம் கருப்பையிலிருந்து வெளிவருவன மனிதன், சில விலங்குகள் போன்றவை.

## ஆத்ம குணங்கள்

1. கருணை
2. பொறுமை
3. பேராசையின்மை
4. பொறாமையின்மை
5. நல்லனவற்றில் பற்று [உறுதி]
6. உலோபத்தன்மையின்மை
7. மனமகிழ்வு
8. தூய்மை

# ஆன்மிக மலர்கள்

## வருடம் முழுவதும் பிரதோஷம் இடிக்க காத்திருக்கும் கல்குவாரிகள்

பொதுவாக ஆவுடையார் மீது லிங்கம் இருக்கும். லிங்கத்திற்கு எதிரில் நந்தி இருக்கும். ஆனால் இந்த கோயிலில், ஆவுடையார் மீது நந்தி, நந்தியின் மீது சிறிய லிங்கமாக ஈசன். வீற்றிருக்கும் இது போன்ற அமைப்பை வேறு எங்கும் காணமுடியாது. அதனால் இந்த கோயிலில் உள்ள நந்தியையும் சிவனையும் தரிசிக்கும் எல்லா நாளுமே பிரதோஷ நாளாக என்கிறார்கள்.

இன்றும் இங்கு சித்தர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு மிக பிரமாண்டமான ஏழு கற் பாறைகள் இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒரு இசை என ஏழு ஸ்வரங்களை தரும் அதிசய கல்லாக இருக்கிறது. ஆயிரம் அடி உயர மலையில் பிணிகளை போக்கும் அரிய சுணைகள் இருக்கிறது.

நந்தி இருக்கும் குகைக்கு மேலே உள்ள இன்னொரு குகையில் கிருஷ்ணரின் சிலை இருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சித்தர்களால் உருவாக்கப்பட்டது. இத்தனை பெருமைகளை கொண்ட இந்த மலை வாலாஜா அருகே இருக்கிறது. இதன் பெயர் அனந்தலை மலை. ஆனால் இங்கு இயங்கி வரும் கல்குவாரிகள் இந்த அற்புத மலை மற்றும் சிவன் கோயில் உள்ள குகையை வெடி வைத்து தகர்க்க திட்டமிட்டு பல்வேறு போராட்டங்களால், பல சிவ பக்தர்களின் முயற்சியால் தற்போதுவரை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் எப்போது வேண்டு மானாலும் இடிக்கப்படலாம் என்ற நிலையில்தான் தற்போது உள்ளது.



கருதப்படும். மேலும் இந்த கோயில் மலை மீது உள்ள குகையில் அமைந்திருக்கிறது. கோயிலை கட்டியது சித்தர் பெருமக்கள்



கல்குவாரி

## துன்பம் ஏற்படாமல் செய்கிறேன்



- கர்மங்களை குறைத்துக்கொள்ள வழி, அதை தைரியமாக அனுபவிப்பதே, நீங்கள் எப்போதும் என்னை நினைத்துக் கொண்டிருந்தால் என் மேல் நம்பிக்கை கொண்டிருந்தால், அதை அனுபவிக்கும் சக்தியை நான் கொடுக்கிறேன். அது துன்பம் என்ற எண்ணம் உங்களில் ஏற்படாமல் நான் செய்கிறேன்.
- லோபம், டாம்பீகம், மன அழுக்கு, கபடம், பொய் முதலியன யாரிடம் இருக்கிறதோ அப்படிப்பட்டவர்கள் என் தரிசனம் பெற்றாலும், அவர்களுக்கு கிடைக்கும் பலன் தாமரை இலையின் மீது தண்ணீர் போன்றதே. அவைகளை வெளியேற்றிய மறு நிமிடமே அவர்கள் என் அனுகிரகத்தை பெறுவார்கள்.
- என்னை எப்போதும் தங்கள் இதயத்தில் நிலை நிறுத்திக்கொள்வோர் பலவீனர்கள் ஆகமாட்டார்கள்.

# சிங்கம், கொக்கு, கழுதை, கோழி, காக்கை, நாயிடம் மனிதன் கற்கவேண்டியவை முன்னோர் கூறிய உண்மை













சிங்கத்திடம் இருந்து ஒன்றையும்,
கொக்கிடம் இருந்து இரண்டையும்,
கழுதையிடம் இருந்து மூன்றையும்,
கோழியிடம் இருந்து நான்கையும்,
காக்கையிடம் இருந்து ஐந்தையும்,
நாயிடம் இருந்து ஆறு
விஷயங்களையும்
நாம் கற்று கொள்ள வேண்டும்.
என முன்னோர்கள்
கூறியுள்ளனர்.

சிங்கம் எந்த ஒரு விஷயத்தையும் உடனடியாக செய்யாது, நன்கு ஆலோசனை செய்த பின்பு முழு மனதுடன் உறுதியாக செயல்படும்.

கொக்கு ஓடு மீன் ஓட உறு மீன் வரும் வரை காத்து நிற்கும், அது போல் அறிவாளி ஒரு காரியத்தை செய்வதற்கு முன் காலம், இடம், தன் ஆற்றல் கூடும் வரை காத்திருந்து செய்வான்.

களைப்புற்றாலும் கழுதை தன் வேலையை தொடர்ந்து செய்யும், வெயில், மழை என்று பாராமல் உழைக்கும், தன் முதலாளிக்கு கட்டு பட்டிருக்கும். ஆகிய மூன்றும் கழுதையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

விடியற்காலை எழுதல், தைரியமாக சண்டையிடுதல், அவர் அவர்க்கு தேவையானவற்றை பிரித்து கொடுத்தல், தனக்கு தேவையானவற்றை தானே உழைத்துத் தேடி சம்பாதித்தல் ஆகிய நான்கும் சேவலிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

இரவில் மனைவியுடன் சேர்ந்து இருத்தல், தேவையான பொருள்களை சேமித்து வைத்தல், யாரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், தைரியம், எச்சரிக்கை உணர்வு ஆகிய ஐந்தும் காக்கையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

கிடைப்பதை உண்டு திருப்தி அடைதல், உணவு கிடைக்காத நேரத் தில் பட்டினி இருத்தல், நன்றாக பசி இருந்தும் கட்டளை வரும் வரை காத்து இருத்தல், நல்ல தூக்கத்தில் இருந்தாலும் உடனடியாக எழுந்து செயல்படுதல், முதலாளிக்கு விசுவாசமாக இருத்தல், உருவத்தில் பெரிய மிருகமாக இருந்தாலும் தைரியமாக எதிர்த்தல் ஆகிய ஆறு குணங்களை நாயிடம் இருந்து கற்று கொள்ள வேண்டும்.

BRG
bhaanraja graphics
bhaanrajagraphics@gmail.com / bhaanrajagraphics@rediff.com
SPECIALIST IN
* BookWork Designing
* Wrapper Designing
* Layout Designing
* Logo Designing
* Plamphet Designing
* Magazine Design Etc.,
89394 99598
New no.16, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Che- 024.

# குண விசேஷங்கள் விருத்தியாக ஆஹார நியமமே உதவுகிறது

பக்தி, ஞானம், உயர்ந்த குணங்கள், உத்தமப் பண்புகள் ஆகியவற்றால்தான் மனுஷன் மனுஷனாக வாழ்கிறான் என்பது அர்த்தம்.

இந்தக் குண விசேஷங்கள் விருத்தியாகவும் ஆஹார நியமமே உதவுகிறது என்று நம் சாஸ்திரங்கள் காட்டுகின்றன.

ஆஹாரம் என்றால் நாக்கால் சாப்பிடுவது மட்டுமில்லை. பஞ்ச இந்திரியங்களுக்கும் ஒவ்வோர் ஆஹாரம் உண்டு.

பல காட்சிகளைப் பார்க்கிறோம். இது கண்ணுக்கு ஆஹாரம்.

பலவிதமான பாட்டு, பேச்சுக்களைக் கேட்கிறோம். இது காதுக்கு ஆஹாரம். இப்படியே நாம் அனுபோகம் பண்ணுகிறதெல்லாம் நமக்கு ஆஹாரம்தான்.

இதில் எல்லாமே சுத்தமானதாய் இருக்க வேண்டும்.

மனசைக் கெடுக்கிற காட்சிகளைப் பார்க்கப்படாது;

மனசைக் கெடுக்கிற பேச்சுக்களைக் கேட்கக் கூடாது; அனுபவிக்கிறதெல்லாம் ஈச்வர ஸாக்ஷாத்காரத்துக்கு உதவுகிறவையாகவே இருக்க வேண்டும்.

இப்படி பொதுப்படையாகச் சொன்னாலும், இந்தப் பலவிதப் புலன் நுகர்ச்சிக்கான ஆஹாரங்களிலும் வாயால் நுகர்கிற ஆஹாரந்தான் முக்கியமாக இருப்பதால் அதைப் பற்றி இவ்வளவு ஆசார விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இதுதான் ஸ்தூலமாக நமக்கு உள்ளேயே போய், தேகம் முழுக்க ரத்தமாக வியாபிக்கிறது;

இதுவே சித்தத்தையும் பாதிக்கிறது.

ஒரு பக்கம் ஆஹாரமில்லாவிட்டால் மனுஷ்யன் ஜீவிக்கவே முடியவில்லையென்றால், இன்னொரு பக்கமோ அது மித ஆஹாரமாக இல்லா விட்டால் தேஹத்துக்கும் சிரமம், மனசுக்கும் அசாந்தி என்றாகிறது.

வயிற்றிலே திணித்துக் கொண்டே போவதால் சாப்பாட்டுப் பொருளுக்கும் நஷ்டம், காரியம் செய்ய முடியாமலும் நஷ்டம், இவற்றைவிட தியானத்தில் மனசு ஈடுபடாமல் போவது பெரிய நஷ்டம்.

ஆகையால் 'சோற்றால் அடித்த பாண்டம்' என்றே மனுஷ்யனுக்குப் பேர் இருப்பதால் இந்தப் பாண்டமும், இதற்கு உள்ளேயிருக்கிற மனசும் நல்லபடியாக வளர்வதற்காக ரிஷிகள் காட்டிக் கொடுத்திருக்கும் போஜன விதிகளை மேற்கொண்டு நடத்திக்காட்ட வேண்டும்.

இதன் முக்கியத்துவமும் அவசியமும் எல்லோருக்கும் புரிவதற்குப் பரமேச்வரனைப் பிரார்த்தனை பண்ணிக் கொள்கிறேன்.








Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699


ஆன்மிகமலர் மெயில் புக் 1–15 மே 2017 37
www.aanmeegamalar.com

# விக்கிரகங்களில் கடவுள் இல்லை. உங்கள் உணர்வுகளே உங்கள் கடவுள்

- ஒவ்வொரு நட்புறவிலும் கொஞ்சம் சுயநலம் உள்ளது. சுயநலமற்ற நட்புறவு இல்லவேயில்லை. இதுதான் கசப்பான உண்மை!
- எந்த ஒரு வேலையைத் தொடங்குவதாக இருந்தாலும் முதலில் உங்களிடம் நீங்களே 3 கேள்விகளை கேட்கவேண்டும்: நான் ஏன் இதனைச் செய்யவேண்டும், முடிவுகள் என்னவாகவிருக்கும், நான் இதில் வெற்றி பெறுவேனா? இந்தக்கேள்விகளை ஆழமாகச் சிந்திக்கும்போதுதான் திருப்திகரமான விடைகள் கிடைக்கும். முயற்சி செய்யுங்களேன்.
- பயம் உங்களை நெருங்கும்போது அதனை தாக்கி அழியுங்கள்!
- உலகின் ஆகப்பெரிய சக்தி இளமையும் பெண்ணின் அழகும்தான்!
- ஒரு வேலையைத் துவங்கிவிட்டீர்களென்றால் அதன் விளைவுகள் பற்றி அச்சப்படக்கூடாது. கைவிடாதீர்கள்! நேர்மையாக பணியாற்றுபவர்கள் மகிழ்ச்சியானவர்கள்.



- மலரின் மணம் காற்றின் திசைவழி மட்டுமே செல்லும், ஒரு நல்ல மனிதனின் நற்தன்மை அனைத்து திசைகளுக்கும் செல்லும்.
- விக்கிரகங்களில் கடவுள் இல்லை. உங்கள் உணர்வுகளே உங்கள் கடவுள். ஆன்மாவே கோயில்.
- மனிதன் செயலினால் உயர்ந்தவனே தவிர பிறப்பினால் அல்ல.
- உங்களை விட தகுதியில் உயர்ந்தவர் களிடமோ, தாழ்ந்தவர்களிடமோ நட்பு பாராட் டாதீர்கள், இந்த நட்பினால் மகிழ்ச்சி ஏற்படாது.
- முதல் 5 ஆண்டுகளுக்கு உங்கள் குழந்தைகளை அன்புடன் நடத்துங்கள். அதன் பிறகு கண்டியுங்கள், 16 வயது ஆகிவிட்டதா நண்பராக நடத்துங்கள், வளர்ந்த உங்களுடைய குழந்தைகளே உங்கள் சிறந்த நண்பர்கள்.

– சாணக்கிய சிந்தனைகள்